விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 25 புதன்கிழமை (09.07.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 202

# மேற்குலகின் நடவடிக்கைக்கு தென்னாபிரிக்கா உதவும்!

## யாழ்.வந்த ரமபோஷ உறுதியளித்தார்

**(யாழ்ப்பாணம்) ஈழத்தமிழர்களுக்குச் சார்பாக மேற்குலக நாடுகள் எடுத்து வருகின்ற நடவடிக்கைகளுக்கு உறுதுணையாகவே தென்னாபிரிக்கா செயற்படும். மேற்குலகம் எடுக்கும் முயற்சிகளுக்கு முரண்பட்டதாக நாங்கள் எதுவுமே செய்யமாட்டோம் எனவும் தென்னாபிரிக்காவின் துணை ஜனாதிபதியும் இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் தென்னாபிரிக்க நாட்டின் விசேட தூதுவருமான சிறில் ரமபோஷ யாழ்ப்பாணத்தில் வைத்து உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**

ரமபோஷ தலைமையிலான குழுவினர் நேற்றுக்காலை யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து யாழ். ரில்ஹோ விருந்தினர் விடுதியில் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அமைச்சர்களான ப.சத்தியலிங்கம், த.குருகுலராஜா ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு உறுதியளித்துள்ளார்.

இந்த சந்திப்புத் தொடர்பாக வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் ஊடகங்களுக்கு கருத்துத்தெரிவிக்கையில்.

தென்னாபிரிக்காவினுடைய உப ஜனாதிபதி மிகவும் முக்கியமான பதவி வகிக்கிறார். அவர் தம்முடைய குழுவினர்களுடன் வந்திருந்தார்.

முதலில் எங்களுக்கு சரியாக விளங்கவில்லை அவர் எதற்காக இங்கு வந்திருக்கிறார் என்று. அதனால் உங்களுடைய வருகையைப் பற்றி எங்களுக்கு சற்று விபரித்து கூறுங்கள் என்று கேட்டோம். அதற்கு தங்களுடைய 19 ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா.சபை கண்டனம்

(ஜெனிவா)

அவுஸ்திரேலியாவில் இருந்து 41 இலங்கையர்கள் திருப்பியனுப்பப்பட்டமை குறித்து ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான பேரவை தமது கவலையை வெளியிட்டுள்ளது.

இலங்கை அகதிகளான மேலும் 153 பேர் நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் நாடுகடத்தப்படாமல் தடுக்கப்பட்டுள்ள நிலையிலேயே ஐக்கிய நாடுகளின் கவலை வெளியிடப்பட்டுள்ளது. நாடு கடத்தப்பட்ட அகதிகள் பரிசோதனை செய்யப்படுகின்றமை குறித்து தமக்கு அறி 20 ஆம் பக்கம் பார்க்க....

## பயிற்சிப் பட்டறைகளை நடத்த பாதுகாப்பு அமைச்சு தடைவிதிப்பு

(கொழும்பு)

அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடகச் சந்திப்பு மற்றும் பயிற்சிப் பட்டறைகளை நடத்தவும், ஊடக அறிக்கைகளை வெளியிடவும் அமைச்சு தடைவிதித்துள்ளது.

படைத்துறை அமைச்சின் கீழ் இயங்கும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலர் டி.எம்.தசநாயக்கவினால் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை விடுக்கப்பட்ட அறிக்கையிலேயே இந்தத் தடை குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் குறிப்பிட்ட சில அரசசார்பற்ற நிறுவனங்கள் பயிற்சிப் பட்டறைகள், ஊடக சந்திப்புகள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிகள் என்று அவற்றின் வரையறைகளுக்கு அப்பால்செயற்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அத்துடன், உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இத்தகைய அனுமதியளிக்கப்படாத செயற்பாடுகளை நிறுத்த வேண்டும் என்று எல்லா அரச சார்பற்ற நிறுவனங்களையும் வலியுறுத்துவதாகவும் இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை அரசசார்பற்ற நிறுவனங்களின் தேசிய செயலகத்தில் பதிவு செய்யப் 20 ஆம் பக்கம் பார்க்க....

## அதிகாரப் பறிப்புக் குறித்து ரமபோஷவுக்கு எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

காணி, பொலிஸ் அதிகாரங்களை வடக்கு மாகாண சபைக்குதர மறுப்பது சட்டத்திற்கு புறம்பானது. சட்டத்திலே மாகாண சபைகளுக்கு இருக்கும் உரித்துக்களை தரமுடியாது என்று மத்திய அரசாங்கம் கூற முடியாது என்பதனையும் தென்னாபிரிக்க துணை ஜனாதிபதியிடம் தாம் எடுத்துக் கூறியதாக வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்றுக் காலை விஜயம் மேற்கொண்ட தென்னாபிரிக்க நாட்டின் துணை ஜனாதிபதியும் 19 ஆம் பக்கம் பார்க்க....



ரமபோஷவுடன் வடக்கு முதலமைச்சர் தலைமையிலான குழு...

## தென்னாபிரிக்காவின் மத்தியஸ்தத்துக்கு தமிழ்க் கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்கும்

### ரமபோஷவிடம் சம்பந்தன் உறுதி

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தென்னாபிரிக்கக் குழுவினர் மத்தியஸ்தம் வழங்கினால் நாம் அவர்களுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்குவோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்

தென்னாபிரிக்க உப ஜனாதிபதி சிறில் ரமபோஷ தலைமையிலான குழுவினர் நேற்று காலை 7.15 மணி



தொடக்கம் 8.45 மணிவரை தமிழ்த் தேசியக்கூட்டமைப்புப் பிரதிநிதிகளை கொழும்பில் சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்புக் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஏற்கெனவே தென்னாபிரிக்காவில் நாம தீர்வு முயற்சிகள் குறித்து சந்திப்புகளை நடத்தியிருந்தோம். இதன் தொடர்ச்சியாகவே இச்சந்திப்பும் அமைந்தது. இந்தப் பேச்சும் எமக் குத்திருப்தகர 20 ஆம் பக்கம் பார்க்க....

## அளுத்கம தாக்குதல் குறித்து விசேட ஆவணம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையில் முஸ்லிம் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பான விசேட ஆவணம் ஒன்று வடக்கு மாகாண முதலமைச்சரினால் தெனணாபிரிக்க துணை ஜனாதிபதியிடம் நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்து கையளிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு நேற்றுக் காலை விஜயம் மேற்கொண்ட தென்னாபிரிக்க துணை ஜனாதிபதி சிறில் ரமபோஷ உள்ளிட்ட குழுவினர் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான குழுவினரை யாழ்.ரில்ஹோறா விருந்தினர் விடுதியில் சந்தித்து கலந்துரையாடியபோதே மேற்படி ஆவணத்தை கைய 20 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பிறந்தநாள் வாழ்த்துக்கள்



ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி யாழ்.மாவட்ட பிரதான
அமைப்பாளரும் வட மாகாணசபை
உறுப்பினருமாகிய கௌரவ

**அங்கஜன் இராமநாதன்**

யாழ்/ பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி
உத்தியோகத்தவர்களாகிய நாம் யாழ்.மாவட்ட
ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் கௌரவ பிரதம
அமைப்பாளரும் வட மாகாணசபை
உறுப்பினருமாகிய அங்கஜன் இராமநாதனின்
பிறந்த தினத்தை நினைவு கூருவதோடு
அவரின் பணிசிறக்க பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

*– வாழ்த்துவோர்:*
K.கல்யாணி, A.ஜொய்சி, A.யூட்சன்
A.அனுஜியன், J.போல் அமலதாசன்

(6875)

# பிறந்தநாள் வாழ்த்துக்கள்



ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி யாழ்.மாவட்ட பிரதான
அமைப்பாளரும் வட மாகாணசபை
உறுப்பினருமான கௌரவ

**அங்கஜன் இராமநாதன்**

அவர்களை
பிறந்தநாளில் மனதார
வாழ்த்துவதோடு அவரது
அரசியல், சமூக பணிகள் சிறப்புடன்
அமைந்திடவும் எல்லாம்வல்ல
நல்லூர்க் கந்தனை
பிரார்த்திக்கின்றோம்.

*மனதார வாழ்த்துவோர்:*
நல்லூர் வாழ் நண்பர்கள்.

(சி-7865)

# பிறந்தநாள் வாழ்த்து

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி யாழ்.மாவட்ட பிரதான
அமைப்பாளரும் வட மாகாணசபை
உறுப்பினரும் ஆகிய கௌரவ

**அங்கஜன் இராமநாதன்**



அவர்கள் இன்றைய தினம் தனது
பிறந்த தினத்தினை
கொண்டாடுகின்றார். அவரினை
மேலும் பல சிறப்புக்களை
பெற்று மக்கள் சேவையில்
உன்னதமான நிலையினை
எட்ட நாம் மனதார
வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர் :*
வலி கிழக்கு அங்கஜன்
ஆதரவாளர்கள்

(6876)


## நீதிமன்ற கூரையில் கைதி

(யாழ்ப்பாணம்)

நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர் ஒருவர யாழ்.மல்லாகம் நீதிமன்றத்தின் கூரையின்மேல் ஏறி பெரும பரபரப்பை ஏற்படுத்தியிருந்த அதேவேளை பொலிஸார் தன்னை கைது செய்ய முயற்சி மேற்கொண்டால் தான் கீழே குதித்து தற்கொலை செய்து கொள்வேன் என்றும எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்தச்சம்பவம் நேற்று மாலை 5.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.இதுதொடர்பாக மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் சிரேஷ்ட சட்டத்தரணி பொன்.பூலோகசிங்கம் தெரிவிக்கையில், தங்கச் சங்கிலியை அறுத்த குறச்சாட்டின் பேரில் மானிப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பின்னர நீதிமன்றத்தின் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நபர் ஒருவர் குறித்த திகதியில் நீதிமன்றில் ஆஜர் ஆகாத நிலையில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. குறித்த நபர் நேற்று தன்மீதான பிடியாணையை ரத்துசெய்யுமாறு நீதிமன்றில் என் ஊடாக மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்நிலையில அவருக்கான பிடிவிறாந்தை ரத்து செய்து நீதவான் உத்தர விட்டிருந்தார்.

இருப்பினும் குறித்த நபர் வேறு ஒரு வழக்குடன் தொடர்புடையவர் என்று பொலிஸாரினால் தேடப்பட்டுவந்த நிலையில் மல்லாகம நீதிமன்ற முன்றலில வைத்து கைது செய்ய முற்பட்டபோது அந் நபர் பொலிஸாரிடம் அகப்படாது நீதிமன்றத்தின் கூரையின் மீதேறியதோடு தன்னை பொலிஸார் கைதுசெய்ய நடவடிக்கை மேற்கொண்டால்தான்தற்கொலை செய்து கொள்வேன் என்று கூறினார்

இருப்பினும் பொலிஸார் குறித்த நபரைக்கைதுசெய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

(எ-6)


**கிரபிக்ஸ் • அனிமேஷன் • மல்டிமீடியா**

விரிவான இலவச கருத்தரங்கு
12 வருடம் அனுபவம்மிக்க விரிவுரையாளர்(CSC India)

**13th July (ஞாயிறு)**

CSC-ASIAN
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

யாழ். நகரில்
2G, ஸ்ரான்லி வீதி,
T.P : 021-222 5677

(C-7860)

# பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி யாழ்.மாவட்ட பிரதான
அமைப்பாளரும் வட மாகாணசபை
உறுப்பினருமாகிய கௌரவ

**அங்கஜன் இராமநாதன்**



அவர்கள் இன்றைய தினம்
தனது பிறந்த தினத்தினை
கொண்டாடுகின்றார்.
அவரினை மேலும் பல
சிறப்புக்களை பெற்று
மக்கள் சேவையில்
உன்னதமான நிலையினை
எட்ட நாம் மனதார
வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர் :*
ஆவரங்கால் மேற்கு அங்கஜன் ஆதரவாளர்கள்.

(6877)

# பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி யாழ்.மாவட்ட பிரதான
அமைப்பாளர் கௌரவ

**அங்கஜன் இராமநாதன்**



அவர்கள்
தனது பிறந்த தினத்தை
இன்று கொண்டாடுகின்றார்.
அவரினை மேலும் பல
சிறப்புக்களை பெற்று
மக்கள் சேவையில்
மேன்மேலும் உயர்ந்திட
நாம் மனதார
வாழ்த்துகின்றோம்.

*இவ்வண்ணம் :*
குட்டியப்புலம் வசாவிளான்
ஆதரவாளர்கள்.

(6874)

# பிறந்தநாள் வாழ்த்துக்கள்



உயர்திரு.
**அங்கஜன்**
**இராமநாதன்**
ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி
யாழ்.மாவட்ட
அமைப்பாளர்

இன்று பிறந்தநாளைக் கொண்டாடும் திரு.அங்கஜன்
இராமநாதன் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி யாழ்.மாவட்ட
அமைப்பாளர் அவர்கள் இந்நாளில் சீரும் சிறப்பும் பெற்று
அரசியலில் பெரு விருட்சமாகி எமக்கு ஒளி வீச
வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர் :*
வலி கிழக்கு புத்தூர் சொர்க்கதிடல்
சரஸ்வதி கிராம மக்கள்

(6880)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர், யுவதிகள் ஆயுதங்களை பயன்படுத்த அனுமதியோம்

## நாமல் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

நாம் இளைஞர்களின் கைகளில் ஆயுதங்களை கொடுக்க மாட்டோம் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கல்கமுவ பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஏனைய கட்சிகளைப் போன்று இளைஞர்களுக்கு ஆயுதங்களை வழங்கி அவர்களை அணி திரட்டப் போவதில்லை. இளைஞர்களை ஒன்றிணைத்து சுபீட்சமான ஓர் சமூகத்தை கட்டியெழுப்புவதே எமது நோக்கமாகும்.

எதிர்வரும் தேர்தலை இலக்கு வைத்து நாம் அரசியல் கூட்டம் நடத்தவில்லை.

89-90 ஆம் ஆண்டுகளில் சில அரசியல்வாதிகள் இளைஞர்கள் கைகளில் ஆயுதங்களை வழங்கினர்.

மேலும் சில அரசியல்வாதிகள் இளைஞர், யுவதிகளை போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களுக்கு பயன்படுத்திக்கொண்டனர்.

எனினும், எமது நீலப்படைத் திட்டத்தின் கீழ் இளைஞர்கள் அபிவிருத்திப் பணிகளில் நேரடியாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

எமது கட்சியிடம் ஆயுதங்கள் கிடையாது. இளைஞர், யுவதிகள் ஆயுதங்களை பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம் என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (2)

# மொழி ஆற்றல் விருத்திக்கு சிங்கள, ஆங்கில வகுப்புக்கள்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இந்து குருமார்கள், இந்து அறநெறி பாடசாலை ஆசிரியர்கள், இந்து நிறுவனங்கள் சார்ந்த இளைஞர், யுவதிகளுக்கான சிங்களம் மற்றும் ஆங்கில வகுப்புகள் நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இத்திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

சிங்களம், ஆங்கில மொழிகளில் ஆற்றல் பெறுவதுடன் இளம் தலைமுறையினர் தம் எதிர்கால நலன் கருதி மொழியாற்றல் பெற்றிருப்பது அவசியமாகும். இதனை கருத்திற் கொண்டு எமது திணைக்களம் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மாவட்டங்களில் ஆங்கில, சிங்கள பயிற்சி வகுப்புகளை ஆரம்பிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

விண்ணப்பதாரர் இருமொழிப் பயிற்சிகளுக்கும் விண்ணப்பிக்க முடியும்.

பங்குபற்ற விரும்புவோர் தங்கள் விண்ணப்பங்களை தமது பெயர், முகவரி, வயது, அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம் அடங்கலாக சுயவிபரத்தினை தயாரித்து எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க் கிழமைக்கு முன்னர் விண்ணப்பங்களை அனு ப்பி வைக்க வேண்டும்.

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி குருகுலம், யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு நாவற்குடா இந்து கலாசார மண்டபம் அருகில் உள்ளவர்கள் அந்நிலையங்களில் நேரடியாகவும் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்களை அனுப்பும் போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆங்கில/சிங்கள வகுப்புகள்" எனக் குறிப்பிட்டு பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இல.248 1/1 காலி வீதி, கொழும்பு 04 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என அவர் அறிவித் துள்ளார். (2)

மக்கள் வாழ்வுக்கு ஒளிகொடுக்கும்
மாண்புறு அங்கஜன் வாழ்வு ஒளிபெறட்டும்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ் மாவட்ட பிரதான
அமைப்பாளரும் வடமாகாணசபை உறுப்பினருமான
கௌரவ
அங்கஜன் இராமநாதன்
அவர்களின்



பிறந்தநாளை முன்னிட்டு எமது மனமகிழ்ச்சியையும்
வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.
அவரது அரசியல், சமூகப் பணிகள் மேலும்
சிறப்புற்று சுபீட்சமான எதிர்காலம் மலர
எல்லாம் வல்ல இறைவன்
அருள்புரிவாராக.

(சி-7857)

வட்டுக்கோட்டை அன்பர்கள்

# இராசி பலன்

**09.07.2014**
**(ஆனி 25, புதன்கிழமை)**
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
துவாதசி முன்னிரவு 11.31 மணிவரை
அனுசம் முன்னிரவு 10.46 மணிவரை
இராகுகாலம் 11.58-1.28 மணிவரை
சுபநேரம் 4.28- 5.58 மணிவரை
அமிர்தசித்தம்

வளவன்

**மேடம்:** இறை வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும், கொடுக்கல்- வாங்கல்களில் கவனம் தேவை.

**இடபம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகளால் நன்மையுண்டு, குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், எதிர்பார்த்த வருமானம் கிடைக்கலாம், ஆரோக்கியமான நாள், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும்.

**கடகம்:** புதிய பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பெற்றோர் மீதான பாசம் கூடும், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், புதிய பொறுப்புகள் கூடும்.

**சிம்மம்:** கல்வியில் மேன்மையுண்டு, ரோக பயமுண்டு, பெற்றோர் மீதான பாசம் கூடும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி:** கொடுக்கல்கள்-வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்:** நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும்.

**விருச்சிகம்:** ஆழ்ந்த சிந்தையுண்டு, பெரியோரின் சந்திப்புகள் இடம் பெறலாம், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், [illegible]

**தனுசு:** இடமாற்றம்,ஊர்மாற்றம் செல்லும் எண்ணம் உருவாகும், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், தேவையற்ற கோபங்களை தவிர்ப்பது நல்லது.

**மகரம்:** பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் அதிகரிக்கும்.

**கும்பம்:** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், எதிர்கால நலன்கருதி புதிய திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்:** அன்பால் சாதித்துக் காட்டும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும், தேவையற்ற பயம் உருவாகும், உறவினர்களை உபசரிப்பதில் ஆர்வம் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 மாத வயதுக்கு மேற்பட்ட மாடுகளுக்கு காதடையாளமிடல்

(கரணவாய்)


கரவெட்டி கால்நடை வைத்திய அலுவலகப் பிரிவினால் மேற்கொள்ளப்படவுள்ள விலங்குகள் கட்டளைச் சட்டத்தின்படி சகல 18 மாத வயதுக்கு மேற்பட்ட மாடுகளுக்கான காதடையாளமிடும் நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 14 ஆம் திகதி





திங்கட்கிழமை கரணவாய் தெற்கிலும் மறுநாள் செவ்வாய்க்கிழமை கரணவாயிலும் 16 ஆம் திகதி புதன்கிழமை கரணவாய் மேற்கிலும் மறுநாள் வியாழக்கிழமை கரணவாய் கிழக்கிலும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை உடுப்பிட்டியிலும் மறுநாள் சனிக்கிழமை உடுப்பிட்டி தெற்கிலும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உடுப்பிட்டி வடக்கிலும் உள்ள கிராம சேவையாளர்களின் அலுவலகங்களில் வைத்து மாடுகளுக்கு காதடையாளம் இடப்படவுள்ளது.

எனவே மாடு வளர்ப்போர் மற்றும்பண்ணையாளர்களை ஒத்துழைப்பு வழங்குமாறு கரவெட்டி கால்நடை வைத்திய அலுவலகம் கேட்டுள்ளது. (அ-2-60)




# தென்னாபிரிக்க துணை ஜனாதிபதி சிறில் ரமபோஷா மத்திய மாகாண அமைச்சர்களை நேற்று சந்தித்தார்







(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த தென்னாபிரிக்காவின் துணை ஜனாதிபதி சிறில் ரமபோஷா, மத்திய அமைச்சர், மாகாண முதலமைச்சர, ஆளுநர மற்றும் மாகாண அமைச்சர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கைக்கு நேற்று முன்தினம் வருகை தந்த தென்னாபிரிக்காவின் துணை ஜனாதிபதியும், இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த தென்னாபிரிக்க அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ள விசேட தூதுவருமான சிறில் ரமபோஷா நேற்று முற்பகல் 10.30 மணியளவில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார்.

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் விசேட உலங்குவானூர்தியில் வந்திறங்கிய சிறில் ரமபோஷா உள்ளிட்ட தூதுக்குழுவினரை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருந்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா,வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையிலான குழுவினர் பொன்னாடை போர்த்தி வரவேற்பளித்தனர்.

இதன்போது ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன், பிரதம செயலாளர் திருமதி விஜயலக்சுமி ரமேஸ், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ்.மாநகரசபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா உள்ளிட்டவர்களும் வருகை தந்திருந்தனர்.

இதேவேளை, பாடசாலை மாணவர்கள் சந்தன மாலை அணிவித்தும் சிறில் ரமபோஷா உள்ளிட்ட குழுவினருக்கு உற்சாக வரவேற்பளித்திருந்தனர்.

இதேவேளை, யாழ்.ரில்ஹோ ஹோட்டலில் முற்பகல் 11 மணியளவில் வடக்கு மாகாணசபையின் முதலமைச்சரும் முன்னாள் உயர் நதிமன்ற நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன், சுகாதாரம் மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் பி.சத்தியலிங்கம், கல்வி, பண்பாட்டு, விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா உள்ளிட்டவர்களைச் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இதன்பின்னர் வடக்கு மாகாண ஆளுநரின் அலுவலகத்திற்கு சென்ற தென்னாபிரிக்க குழுவினருக்கு வடக்கில் யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்தி குறித்து விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு நேற்று முன்தினம் வருகைதந்த தென்னாபிரிக்காவின் துணை ஜனாதிபதி தலைமையிலான குழுவினர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்,பீரிஸ், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினருடன் சந்திப்புக்களை நடத்தியிருந்தனர்.

இலங்கையில் நல்லிணக்க நடவடிக்கைகள் குறித்து ஆராய வருகைதந்துள்ள தென்னாபிரிக்காவின் துணை ஜனாதிபதி சிறில் ரமபோஷா தலைமையிலான குழுவினர் பல்வேறு தரப்பினருடன் சந்திப்புக்களை மேற்கொண்டு ஆராய்ந்துள்ளதோடு இன்று நாடு திரும்பவுள்ளனர் என்றும் தெரிய வந்துள்ளது. (2-6)

## அம்மன்பீடம் அமைக்க நிதி அன்பளிப்பு

(கரணவாய்)

இமையாணன் ஸ்ரீ முருகன் ஆலயத்திற்கு அம்மன் பீட தனித்துவ ஆலயம் கட்டுவதற்கு இமையாணன் கேணியடியைச் சேர்ந்த சின்னத்துரை சந்திரா தம்பதியினர் தமது சொந்த நிதியில் இருந்து 7 இலட்சம் ரூபாவினை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இதற்கமைய இவ்வாலய அடிக்கல் நாட்டு விழா கடந்த 2 ஆம் திகதி ஆலய பிரதம குரு தலைமையில் நடைபெற்றது. இதன்போது அடிக்கல்லினை அத் தம்பதிகள் நாட்டி வைத்துள்ளனர். (2-60)



யாழ்.கிளையின் இலங்கை வங்கி உத்தியோகத்தர்களினால் டெங்கு ஒழிப்பு சிரமதான நிகழ்வு யா/கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது சிரமதானப் பணியில் ஈடுபட்ட வங்கி உத்தியோகத்தர்களையும் மற்றும் மாணவர்களையும் படத்தில் காணலாம். (படம்:- என்.குமார்)

## உயர்தர மாணவர்களுக்கு அனுமதி அட்டை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி க.பொ.த. (உ/த)- 2014 பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக அதிபர் அறிவித்துள்ளார்.

மாணவர்கள் அனைவரும் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய அடையாள அட்டையுடன் சீருடையில் சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (2)

# காணி சுவீகரிப்பை தடுத்து நிறுத்த மக்கள் போராட்டமே அவசியம்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜி

(யாழ்ப்பாணம்)

தமிழர் பகுதிகளில் தொடர்ந்து இடம்பெற்று வரும் படைத்துறையினரின் காணி சுவீகரிப்பினைத் தடுத்து நிறுத்துவதற்கும் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்து காணி சுவீகரிப்பை தடுத்து நிறுத்தவும் மக்கள் போராட்டம் மூலமே முடியும் என வட மாகாண சபையின் ஆளும்கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கீரிமலை, சேந்தாங்குளம் மற்றும் திருவடிநிலை ஆகிய பகுதிகளில் 127 ஏக்கர் காணிகளைச் சுவீகரிக்கும் நோக்கில் நேற்று முன்தினம் காலை காணி அளவீடு செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோரின் தலையீட்டினால் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து அங்கு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கிலே பொதுமக்களின் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் சுவீகரிக்கப்பட்டு இராணுவ முகாம்கள் அமைக்கப்படவுள்ளதுடன் சிங்களக் குடியேற்றங்களும் மேற் கொள்ளப்படவுள்ளன.

வலி.வடக்கு சேந்தாங்குளம் ஆரோக்கியநாதர் தேவாலயம் அமைந்துள்ள காணியை கூட இன்று கடற்படையினருக்கு முகாம் அமைக்கும் நோக்குடன் சுவீகரிக்க முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன.

ஒருமத வழிபாட்டுத்தலம் அமைந்துள்ள காணியையே கடற்படை முகாம் அமைக்கும் நோக்குடன் சுவீகரிக்க முயல்கின்றனர். இவ்வாறான காணி சுவீகரிப்புகளுக்கு எதிராக மக்கள் தொடர் போராட்டங்களை மேற்கொள்வதன் மூலம் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்க முடியும்.

சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்ப்பதன் மூலம் சர்வதேசம் அரசாங்கத்திற்கு கொடுக்கும் அழுத்தமே காணி சுவீகரிப்பை தடுத்து நிறுத்தும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன வர்த்தகத்துறையுடன் போட்டியிடும் வகையில் கூட்டுறவு துறையில் மாற்றம்

## அமைச்சர் ஜோன்ஸ்டன் தெரிவிப்பு



(கொழும்பு)

**அரசாங்கம் 2020 ஆம் ஆண்டாகும் போது நாட்டின் நவீன வர்த்தகத்துறையுடன் போட்டியிடக்கூடிய நிலைமையில் நவீன வர்த்தகத் துறையாக கூட்டுறவு இயக்கத்தை மாற்றுவதற்கு கொள்கை அளவில் தீர்மானம் எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

கூட்டுறவு இயக்கத்தை முன்னேற்றுவதற்கு தாம் முழு ஆதரவு வழங்குவதாக அவர் தெரிவித்ததாக அமைச்சர் ஜோன்ஸ்டன பெர்னாண்டோ கூட்டுறவு மாநாட்டில் தெரிவித்தார்.

இந்த யுகத்தில் கூட்டுறவு இயக்கத்தை முறையாக முன்னேற்றவில்லையாயின் மீண்டும் கட்டியெழுப்புவது கஷ்டமானது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

2020 ஆம் ஆண்டாகும் பொழுது கூட்டுறவு இயக்கத்தின் நிலைமை தொடர்பாக இலங்கை மன்றக் கல்லூரியில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

கூட்டுறவு துறையில் உள்ள பல்வேறு குறைபாடுகளையும் துரிதமாக களைந்து சகல கிராமிய வங்கிகள், பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றை நல்ல நிலைமைக்கு கொண்டு வருவதற்கு அவற்றின் தலைவர்களும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களும் முகாமையாளர்களும் செயற்பட வேண்டுமென்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

எந்தவித இலாபமும் இல்லாமல் இயங்கும் கூட்டுறவு இயக்கங்களை மூடி அவற்றை வேறு இலாபம் தரும் துறைகளில் ஈடுபடுத்தவும் அமைச்சர் உத்தரவிட்டார்.

கூட்டுறவு அபிவிருத்திக்காக கிராமிய வங்கி மற்றும் நிதி சேவா நிறுவனங்களின் நெறியாள்கை கட்டாயம் இருக்க வேண்டும். தற்போதைய கூட்டுறவு ஊழியர் சட்டம் திருத்தப்பட்டு வருகிறது.

மஹிந்த சிந்தனை எதிர்கால தொலை நோக்கில் கூட்டுறவு இயக்கத்திற்கு பொறிமுறை ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

விவசாயிகள் அடிக்கடி தரகர்களின் அழுத்தங்களுக்கு உட்படுத்தப்படுவதை தவிர்ப்பதற்காக உற்பத்தியை இலக்காக கொண்ட கூட்டுறவுமுறை ஆரம்பிக்கப்படுகிறது.

விவசாயிகளுக்கு கடன் வழங்கும் நிதி நிறுவனங்களை பலப்படுத்த விவசாயிகளுக்கு தேவையான கடன் வசதிகளை விவசாய வங்கிமுறை ஊடாக வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். (அ-2)

# நாடளாவிய ரீதியில் இரத்தத்திற்கு தட்டுப்பாடு

நாடளாவிய ரீதியிலுள்ள இரத்த வங்கிகளில் இரத்த சேமிப்புகளில் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதனால் டெங்கு நோயாளர்களுக்கான சிகிச்சை அளிப்பது பெரும் சவால் மிக்கதாக மாறியுள்ளது என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் கண்டி, மாத்தறை, அம்பாந்தோட்டை, அம்பாறை, குருணாகலை, பேராதனை ஆகிய பிரதேச இரத்த வங்கிகளிலேயே அதிகளவில் தட்டுப்பாடு நிலவுகிறது.

இது தொடர்பாக அரச தாதிய உத்தியோகத்தர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் இரத்ததானம் செய்பவர்களினால் பெறப்படுகின்ற இரத்த சேமிப்பு பைகளில் பல வகைகள் காணப்படுகின்றன. இவற்றில் இரண்டு மற்றும் மூன்று பைகள் அடங்கிய பொதிகளே அதிகம் பாவனைக்குட்படுத்தப்படுகின்றன.

இவற்றில் மூன்று பைகள் அடங்கிய பொதிகளிலேயே இரத்தம் இலகுவில் சேமித்து பாதுகாக்க முடியும். இதன் காரணமாக தொற்று நோய்களுக்கு சிகிச்சை அளிப்பது சவால் மிக்கதாக மாறியுள்ளது.

எனவே இத்தட்டுப்பாட்டை நீக்கும் வகையில் சுகாதார அதிகாரிகள் செயற்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# அமெ. அரசியல் உள்நோக்கத்துடன் தலையீடு செய்ய முயல்கின்றது?

### ஊடக அமைச்சர் கூறுகின்றார்

அமெரிக்கா அரசியல் நோக்கத்துடன் செயற்படுகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டின் தேர்தல் முறைமை, மக்களின் வாக்களிக்கும் உரிமை ஆகியனவற்றில் தலையீடு செய்ய அமெரிக்கா முயற்சிக்கின்றது.

யாரின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக அமெரிக்கா இவ்வாறு தலையீடு செய்கின்றது என்பது புரியவில்லை.

கடந்த காலங்களில் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்பட்ட விதம் குறித்த அனுபவம் காணப்படுகின்றது. இவற்றின் ஊடாக நாட்டுக்கு எதிராக செயற்படும் தரப்பினர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இலங்கை வாக்காளர்கள் புத்திசாதுரியமானவர்கள். அளிக்கப்பட்ட வாக்கு, செல்லுபடியான வாக்குகள் குறித்து கடந்த தகவல்களின் மூலம் இந்த விபரங்களை புரிந்து கொள்ள முடியும்.

மக்கள் வாக்களிப்பது நாட்டின் உள் விவகார பிரச்சினையாகும். இந்த விடயங்களில் வெளிநாடுகள் தலையீடு செய்ய வேண்டிய அவசியம் கிடையாது.

போர் வெற்றியை தாங்கிக் கொள்ள முடியாது அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இவ்வாறு இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்கின்றன என கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (2)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மண்டைதீவு தில்லேஸ்வரம் சிவன் கோவில்



### பிரதம குருவின் ஆசிச்செய்தி

சைவப் பாரம்பரியம்மிக்க யாழ்ப்பாண நன நகரின் மண்டைதீவு புண்ணிய கிராமத்தில் ஸ்ரீ சிவகாமவல்லி அம்பிகை சமேத ஸ்ரீமத் தில்லேஸ்வரப் பெருமானுக்கு ஜயவருடம் ஆனித்திங்கள் 25-ம் நாள (09.07.2014) இன்று குடமுழுக்கு நடைபெறுவது அனைவருக்கும் திருவருள் கிடைக்கும் பேறாகும். நீண்ட காலத்தின பின்னர் இப்பிரதேசத்தில் சிவ வழிபாடு ஆரம்பித்திருப்பது இறையருள் எமக்குக் கிடைத்திருப்பதற்கான அறிகுறியாகும். புகழ்பூத்த மாந்தர்களாலும் சைவ சீலர்களாலும ஞானிகளாலும் நிறைந்த பிரதேசம் மண்டைதீவு. நாற்றுக்கும் புகையிலைகும் பெயர் பூத்த மண்ணிணை உடைய மண்டைதவில் வரும் காலததில் பழமையும் பெருமையும் அமைதியும் சுபீட்சமும் பூத்துக்குலுங்கவேண்டும். அதற்கு பெருமானின் கும்பாபிஷேகம் அருள் பாலிக்க வேண்டும். கொடிய யுத்தத்தின் சுவடுகளால் மனம் நொந்து போன மக்களுக்கு, இப் பெருஞ்சாந்தி விழா அருள் ஆறுதல் அளிப்பதாகவும் வாழ்வின் உயர்வுக்கு ஒளி கொடுப்பதாகவும் அமையட்டும் என வாழ்த்தி எல்லாம் வல்ல சிவகாமவல்லி அம்பிகை சமேத தில்லேஸ்வரப் பெருமானை பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேன்.

**சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள்.**
**பிரதிஷ்டா பிரதமகுரு**



ஆசி



நல்லை ஆதீன
குரு முதல்வர்

## அரசியல் தலைவர்கள்



சி.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர், வடக்கு மாகாணசபை




கே.என்.டக்ளஸ்தேவானந்தா
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்



சி.சிறிதரன்
பாராளுமன்ற உறுப்பினர்




எஸ்.சிவராஜா
வேலணை பிரதேச சபைத்தலைவர்



## சமய, சமூக பிரமுகர்கள்




ஆ.தியாகராசா தலைவர்,
நயினை நாகபூஷனி ஆலயம்




சிவநெறிச்செல்வர் நயினை
சி.ஜெகநாதன் (கனடா)


## பரிபாலன சபையினர்



இ.தில்லைநாதன்
தலைவர்



ப.திருவருட்செல்வன்
செயலாளர்



தி.ரகுநாதன்
பொருளாளர்

## 9 ஆண்டுகள் நயினையில் குடியிருந்த ம

மண்டைதீவு தில்லேஸ்வரம் எனும் திவ்விய ஷேத்திரத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் சிவகாமவல்லி அம்பிகை சமேத ஸ்ரீமத் தில்லேஸ்வரப் பெருமானுக்கு இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத் தலைவரும் சித்தன்கேணி சிவன்கோயில் பிரதம குருவுமாகிய வணக்கத்திற்கும் போற்றுதலுக்குமுரிய சிவஸ்ரீ சபா வாசுதேவக்குருக்கள் பிரதம சிவாச்சாரியராக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பது நாம் செய்த தவப்பேறாகும்.

தமிழகத்தில் உள்ள சிதம்பரத் திற்கு தில்லை என்று பெயருண்டு.

அந்த நாமத்தைக்கொண்ட தில்லேஸ்வரம் மண்டைதீவு வடமேற்குத் திசையில் அமைந்துள்ளது.

ஆசிரியையாக [illegible] தில்லைநாயகி அம்மையார் இவ்வாலயத்தை சுப்பிரமணிய சுவாமிகளின் சமாதியாக அமைத்தார்.

ஈழத்திற்குக் கடையிற்சுவாமிகளைக் கூட்டி வந்து, தன் சொந்த நிலத்தில் வீடுகட்டி கடையிற் சுவாமிகளைத் தங்கவைத்து ஈழத்துச் சித்தர் பரம்பரைக்கு வித்திட்ட மண்டை தீவு நன்னியர் என்ற பெருந்தகையின் சமாதியும் இவ்வாலயத்தில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய சிறப்புமிக்க இவ்வாலயத்தின் முதலாவது மகா கும்பாபிஷேகத்தை நயினை சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்கள் நடத்திவைத்தார்.

இறைநாட்டமிக்க பெண்கள் தங்கியிருந்த ஆச்சிரமமாக இத்தில்லேஸ்வரப்பதி விளங்கியது.

சிறப்பு மிக்க தில்லேஸ்வரம் மண்டைதீவின் வரலாற்றுப் பதிவுகளில் முக்கிய அங்கமாக இருப்பதை நாம் மறந்துவிடலாகாது.

1990 களில் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக மண்டைதீவு மக்கள் தம்புலம் விட்டேகிய போது, அதி உயர் பாதுகாப்பு எல்லைக்குள் தில்லேஸ்வரம் என்னும் புண்ணிய திருத்தலமும் உள்ளடங்கலாயிற்று.

மண்டைதீவுக்குச் சென்று வருவதில் இருந்த தடைகளும் பாஸ் நடைமுறைகளும் மண்டைதீவு மக்களையும் தில்லேஸ்வரப் பெருமானையும் காட்சிப் புலத்தால் பிரித்தன.

2005ஆம் ஆண்டு ஆலயத்திற்குச் செல்கின்ற வாய்ப்புக் கிடைத்த போது அங்கு சென்றவர்கள்; செடிகளும் கொடிகளும் படர்ந்து ஆலயத்தை மூடி கவசமாக்க, நாக பாம்புகள்ஒரு பெரும்படையாகநின்று தில்லைக் கூத்தனைக் காவல் செய்வது போன்ற காட்சியைக் கண்டனர்.

பல்வேறு சிரமங்கள் மத்தியில் ஆலயத்திற்குள் சென்று பார்த்த போது சிவகாமவல்லி அம்பிகையின் எழுந்தருளி விக்கிரகம் [illegible]ருக்க, தனித்திருந்த நடராஜப்பெருமானின் எழுந்தருளி விக்கிரகத்தைப் பாதுகாக்கும் பொருட்டு நடராஜர் சிலை மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலயத்தில் வைப்பதற்காக எடுத்துச் செல்லப்பட்டது.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற எல்லைப்பாடுகளைக் கடந்து நடராசரை எடுத்துச் சென்றமை ஒரு கடத்தல் சம்பவமாகவே படைத்தரப்பால் பார்க்கப்பட்டது.

எனினும் நிலைமையை உணர்ந்து கொண்ட அப்பகுதி கட்டளை அதிகாரி, நடராஜர் சிலையை மண்டைதீவு பிள்ளையார் ஆலயத்தில் வைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கினார்.

இருந்தும் விடுமுறையில் சென்றிருந்த பொதுசனத் தொடர்பு அதிகாரி அன்றைய இரவுப் பொழுதில் கடமைக்கு வந்தபோது, நடராஜர் சிலை தொடர்பில் கிடைத்த தவறான செய்தியையடுத்து ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குத் தகவல் அனுப்ப, இரவோடு இரவாக வந்த பொலிஸார் மண்டைதீவு பிள்ளையார் கோயிலுக்கு பாதுகாப்பு வழங்கி மறுநாள் அதிகாலைப் பொழுதில் நடராஜர் சிலையை ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றனர்.

அச்சம்பவம் **AR/50/2005** என்ற இலக்கத்தில் வழக்குப் பதிவாகியது.

வழக்கு விசாரணையின்போது நடராஜர் சிலைநீதிமன்றின்பாதுகாப்பில் வைக்கப்பட்டது.

இரண்டு ஆண்டுகள் நீதிமன்றில் இருந்த நடராஜரை, தொடர்ந்தும் நீதிமன்றில் வைத்திருப்பது நல்லதல்ல என்று கருதிய அப்போதைய ஊர்காவற்றுறை நீதிபதி ஆ.கி. அலெக்ஸ்ராஜா அவர்கள் நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் சபையிடம் நடராஜர் சிலையை ஒப்படைத்து சிலையைப் பராமரிக்க நடவடிக்கை எடுத்தார்.

இதன்பிரகாரம் 10.12.2007 ஆம் ஆண்டு நடராஜர் சிலை பொலிஸார் மற்றும் கடற்படையினரின் பலத்த பாதுகாப்புடன் நயினாதீவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்ஜெசீரா ஊடகவியலாளரிடம் நான்கு மணி நேரம் விசாரணை

அல்ஜெசீரா இணையத்தள ஊடகவியலாளர் டினோக் கொலம்பகே, இலங்கை குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் கொழும்பில் நான்கு மணிநேரம் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அளுத்கம வன்முறைகள் தொடர்பாகவே நேற்று முன்தினம் இவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டதாக, அவரது சட்டவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அளுத்கம வன்முறையில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர்பாக அல்ஜெசீரா செய்தியாளர் வெளியிட்ட செய்திக்கு விளக்கம் கோரும் வகையிலும், தனிப்பட்ட முறையில் அவர் சமூக வலைத்தளத்தில் பதிவு செய்த விடயங்கள் குறித்தும் விசாரணை நடத்தப்பட்டதாக, இலங்கை பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

செய்தி பெறப்பட்ட முறை குறித்தும் அவரிடம் விசாரிக்கப்பட்டதாகவும் பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

அல்ஜெசீரா வலையமைப்புடன் கொண்டுள்ள உறவுகள் தொடர்பாக டினோக் கொலம்பகேயிடம் விசாரிக்கப்பட்டதாக, அவரது சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# வல்லப்பட்டை ஜெல் வைத்திருந்த 8 பேருக்கு தண்டப்பணம் விதிப்பு

வல்லப்பட்டை ஜெல் வைத்திருந்த எட்டு பேருக்கும் ஹற்றன் மாவட்ட நீதிமன்ற நீதவான் அமில ஆரிய சேன, ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்து தீர்ப்பளித்தார்.

மேற்படி விடயத்துடன் தொடர்புடைய எட்டுப் பேர் வல்லப்பட்டை ஜெல்லுடன் நோர்வூட் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் அவர்கள் பயணித்த கெப் ரக வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

குறித்த சந்தேகநபர்கள் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்து ஹற்றன் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது ஒருவருக்கு தலா 15 ஆயிரம் ரூபாய் வீதம் 8 பேருக்கும் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து நீதவான் நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்தார்.

அத்துடன் குறித்த கெப் வாகனத்தை நீதிமன்ற கட்டுப்பாட்டில் வைத்து மேலதிக விசாரணைகளை ஆரம்பிக்குமாறும் நோர்வூட் பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டார். (அ-2)

# எமது மக்களின் அவலங்களை காட்டி வெளிநாடுகளில் சேகரித்த பணம் எங்கே?

## சந்திரகுமார் எம்.பி. கேள்வி

(மானிப்பாய்)

யாழ்ப்பாணத்தின் பெரும்பாலும் எல்லா கிராமங்களும் சகல விடயங்களிலும் கடந்த காலங்களில் மிக மோசமான புறக்கணிப்புகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன என்பதற்கு இது போன்ற கிராமங்கள் சான்று பகிர்கின்றன.

அபிவிருத்தி அடைந்த மாவட்டம் புத்திஜீவிகளை அதிகம் கொண்ட மாவட்டம் என்றெல்லாம் கூறப்படுகின்ற யாழ்.மாவட்டத்தின் கிராமங்கள் இன்றும் அபிவிருத்தியிலும் கல்வி நடவடிக்கைகளிலும், வேலை வாய்ப்புகளிலும் என எல்லாத் துறைகளிலும் புறக்கணிக் கப்பட்டுள்ளன என ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

சுழிபுரம் பகுதி மக்கள் சந்திப்பு நிகழ்வு தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது கிராமங்கள் வளர்ச்சியடையாமலும் மக்களுக்கான அடிப்படை வசதிகள் இல்லாமலும், வீதிகளின் உட்கட்டுமான அபிவிருத்திகள் இல்லாதிருப்பதும் இன்று நடந்த தவறு அல்ல. கடந்த காலங்களில் கிராமங்கள் அபிவிருத்தியிலும் சரி ஏனைய விடயங்களிலும் சரி புறக்கணிப்புகளுக்கு உள்ளாக்கப்பட்டமையே இந்த நிலைமைக்கு இட்டுச்சென்றுள்ளது.

கடந்த காலங்களில் விட்ட தவறை உடனே நாங்கள் நிவர்த்தி செய்துவிட முடியாது. ஆனால் எங்களின் நோக்கம் மக்களின் அவல வாழ்வையெல்லாம் நிவர்த்தி செய்து, அவர்கள் சிறப்பான வாழ்க்கை வாழ வேணடுமென்றுதான். அதற்காக தான் அரசுடன் இணைந்து நிற்கின்றோம்.

வடமாகாணத்தில் வாழ்கின்ற கிட்டத்தட்ட 11 மில்லியன் மக்களில் மூன்றில் இரண்டு பங்கினர் வறுமைக் கோட்டிற்கு கீழ்தான் வாழ்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் இன்றும் 40 வீதமான மக்கள் சமுர்த்தி நிவாரணம் பெறுகின்றனர். இது யாழ்ப்பாணத்தில் வறுமையான மக்கள் எந்தளவுக்கு வாழ்கின்றார்கள் என்பதை காட்டுகின்றது.

எனவேதான் நாங்கள் இந்த நிலைமைகளை மாற்றியமைப்பதற்கு போராடி வருகின்றோம்.

தமிழ் மக்கள் மீண்டுமொரு அழிவை சந்திப்பார்களாக இருந்தால் இவ் இலங்கைத்தீவிலே தமிழ் இனம் ஒன்று வாழ்ந்ததற்கான வரலாறே இல்லாமல் போய் விடும்.

அந்தளவுக்கு தமிழ் மக்கள் பொருளாதார ரீதியாக மிகவும் பலவீனமடைந்துள்ளனர்.

எங்கள் மக்களின் துன்பங்களையும் அவலங்களையும் போக்குவதற்காக மக்களின் பெயரை வைத்து வெளிநாடுகளிலே சேகரித்த கோடிக் கணக்கான யூரோக்களும், பவுண்களும் எம் மக்களின் துன்பங்களைத் துடைத்ததாக தெரியவில்லை.

இன்று அவ்வாறு சேர்த்தவர்கள் கோடீஸ்வரர்களாகவும், செல்வந்தர்களாகவும் இருக்கின்றார்கள்.

இன்று அவர்கள்தான் மேலும் மேலும் குழப்பங்களை தூண்டி விடுபவர்களாகவும் இருக்கின்றார்கள்.

இந்த அபிவிருத்திகள் எல்லாம் ஏமாற்று என்று கூறுகின்றவர்கள்தான் அபிவிருத்தியின் பயனை உச்ச அளவில் அனுபவித்துக் கொண்டு மக்களை ஏமாற்றுகின்றார்கள் என்றும் தெரிவித்தார்.


இதன் போது மக்களின் கோரிக்கைகள், பிரச்சினைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பாக வீதிகள் புன்ரமைப்பு தொடர்பில் விரைவில் முதற்கட்டமாக மிக முக்கியமான இரண்டு வீதிகள் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதோடு, முன்பள்ளி ஆரம்பித்தல் மக்களின் வாழ்வாதார உதவிதிட்டங்கள் விடயத்திலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலய பாடசாலைக்கு தனது பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதியிலிருந்து ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவினை ஒதுக்கீடு செய்து தருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-23)

# பொருளாதார தடையை விதிக்க வியூகம் வகுக்கிறது அமெரிக்கா

## அமைச்சர் விதாரண எச்சரிக்கை

(கொழும்பு)



**அமெரிக்கா தலைமையிலான மேற் குலகம் இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடையை விதிப்பதற்கான அனைத்து வியூகங்களையும் முன்னெடுத்து வருகின்றது என சிரேஷ்ட அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

தென்னாபிரிக்காவின் ஒத்துழைப்பை பெற்று தேசிய பிரச்சினை தீர்வுக்கான புதிய பயணத்தை ஆரம்பிக்க வேண்டியது அவசரத்தேவையாகும் என்று அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா.மனிதவுரிமை ஆணைக்குழு எமக்கு எதிராக விசாரணைகளை நடத்த சர்வதேசக் குழுவை நியமித்தது.

இது தொடர்பில் எமது எதிர்ப்பை ஏற்றுக்கொள்ளாது சர்வதேச விசாரணைக்குழு தனது வேலையை ஆரம்பித்து விட்டது. அது மட்டுமல்லாது, அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் இச்சர்வதேச குழுவின் விசாரணைகளை அடிப்படையாக வைத்து இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடையை விதிக்கும் வியூகங்களை வகுத்து வருகின்றது. இந் நிலையேற்பட்டால் நாமும் மக்களும் பாரிய நெருக்கடிகளை சந்திக்க நேரிடும்.

எனவே, சர்வதேசத்தின் இந்த சூழ்ச்சியிலிருந்து நாங்கள் விடுபட வேண்டுமானால் தேசிய பிரச்சினையை தீர்ப்பதற்கான பாராளுமன்றத் தெரிவுக்குழுவை வெறும் பெயரளவில் மட்டுமே நியமக்காது அதனை நடைமுறைச் சாத்தியமான குழுவாக நியமிக்க வேண்டும்.

நம்பிக்கையான உள்நாட்டு விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்த வேண்டும்.

வடமாகாண சபைக்கு அதிகாரங்களை வழங்கி சுதந்திரமாக இயங்க அனுமதி வழங்க வேண்டும். அதற்கு மத்திய அரசு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது சர்வதேச அழுத்தங்களிலிருந்து மேற்குலகம் எமக்கு வைத்துள்ள பொருளாதாரத் தடைப் பொறியிலிருந்தும் விடுபட முடியும்.

இதன்போது, நாட்டுக்குள் தேசிய ஒற்றுமையை வலுப்படுத்த முடியும். இதுவே சமசமாஜக் கட்சியின் கொள்கையாகும்.

தென்னாபிரிக்கா சர்வதேச ரீதியில் எம்க்கெதிரான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் சூழ்நிலையில் இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்க தென்னாபிரிக்காவின் பதில் ஜனாதிபதி ரமபோஷா தலைமையிலான குழுவின் வருகையை வரவேற்கின்றோம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பை ஏற்றே தென்னாபிரிக்கக்குழு இங்கு வருகின்றது. இதன் மூலம் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான புதியதொரு பயணத்தை ஆரம்பிக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

857

## புலி மீசை மருந்து!

கொரியாவின் லூன் மலைத் தொடரில் துறவி ஒருவர் இருந்தார். மிகச் சிறந்த ஞானி.மந்திர தந்திரங்களிலும் திறமையானவர். ஆயிரமாயிரம் மனிதர்கள் அவரிடம் அறிவுரை பெறுவதற்காக வருவார்கள்.

ஒருநாள் அவரைப் பார்ப்பதற்காக ஒரு பெண் வந்தாள். என் கணவர் என்னை வெறுக்கிறார். அவர் என் மீது அன்பு கொள்ளும்படி செய்ய வேண்டும் என்று வேண்டினாள்.

துறவி அப்படி அவர் உன்னை வெறுப்பதற்கான காரணம் என்ன? என்று கேட்டார்.

என் கணவர் போருக்குச் செல்வதற்கு முன்பு என் மீது மிகவும் அன்பு செலுத்தினார். என் வேலைகள் எல்லாவற்றிலும் உதவி செய்தார். ஆனால் மூன்று வருடங்கள் கழித்துத் திரும்பி வந்திருக்கும் அவர் வெறுப்புடனும் விரக்தியுடனும் இருக்கிறார் என்று விளக்கினாள்.

இதெல்லாம் போருக்குச் சென்றதால் ஏற்பட்ட விளைவுதான் என்றார் துறவி.

அவர் என் மீது மீண்டும் அன்பு கொள்ளும்படி செய்வதற்கு நீங்கள் மருந்து தருவீர்கள் என்று கேள்விப்பட்டேன் என்றாள்.

அப்படி ஒரு மருந்தைச் செய்ய என்னால் முடியும். நிறையப் பொருட்களைச் சேர்த்துத்தான் அந்த மருந்தைச் செய்ய வேண்டும். ஆனால் மிக அவசியமாகத் தேவைப்படும் ஒரு பொருள் மட்டும் என்னிடம் இல்லை என்றார் துறவி.

அது என்ன என்று சொல்லுங்கள் நான் கொண்டு வந்து தருகிறேன் என்றாள் அவள்.

புலியின் மீசையில் இருந்து ஒரே ஒரு ரோமம் வேண்டும் என்றார்.

சரி எப்பாடுபட்டாவது கொண்டு வருகிறேன் என்று உறுதி அளித்து விட்டு அவள் புறப்பட்டுச் சென்றாள்.

அடுத்தநாளே அவள் புலியைத் தேடிச் சென்றாள். காட்டுக்கு அருகில் உள்ள நதியின் கரையில் ஒரு புலியைக் கண்டாள். அவளைப் பார்த்த புலி உறுமியது. உடனே பயந்து பின்வாங்கினாள் அவள்.



முதல் நாள் புலியைக் கண்ட அதே இடத்துக்கு அடுத்த நாளும் சென்றாள். அவளைப் பார்த்து புலி மீண்டும் உறுமியது. மறுபடியும் அவள் பின்வாங்கிச் சென்றாள்.

இப்படி தினமும் அவள் அந்த இடத்துக்குச் சென்றதால் புலிக்கு அவளது அண்மை பழகிவிட்டது. அது உறுமுவதை நிறுத்தியது. அவள் அந்தப் புலிக்கு உணவு கொண்டு வந்து கொடுத்தாள்.

நாட்கள் செல்லச் செல்ல புலி அவளிடம் நட்புடன் பழகத் தொடங்கியது. அவளிடம் இருக்கும் உணவுப் பொருளைப் பெற்றுக் கொள்வதற்காக மிக நெருக்கமாக வந்தது.

ஒருநாள் இவள் அச்சத்துடனேயே புலியின் தலையைத் தடவினாள்.

சில நாட்கள் கழித்து புலியின் கன்னப் பகுதிகளில் வருடினாள். அப்படி ஒரு நாளில் அவள் மிகத் திறமையாக புலியின் மீசை ரோமங்களில் ஒன்றைப் பறித்தாள்.

அந்த ரோமத்தை எடுத்துக் கொண்டு துறவியிடம் ஓடினாள். அவள் துறவியைப் பார்த்தவுடன் எனக்கு கிடைத்து விட்டது என்று வெற்றிக் கூச்சலிட்டாள்.

நல்லது என்றார் துறவி.

அந்த ரோமத்தை எடுத்துச் சென்று அடுப்புத் தீயில் எறிந்தார்.

ஓ நீங்கள் என்ன இப்படி செய்து விட்டீர்கள்! என்று பதற்றத்துடன் கேட்டாள் அவள்.

இந்த மீசை ரோமத்தைக் கொண்டு அற்புத சக்தியுடைய மருந்து தயாரித்து தருகிறேன் என்று தானே சொன்னீர்கள்?

உனக்கு அந்த மருந்து தேவையில்லை பெண்ணே. புலியின் அன்பை நீ எப்படிச் சம்பாதித்தாய்?

அன்பான செயல்கள் மூலமும் மிகவும் பொறுமையாக இருந்ததன் மூலமாகவும் தானே? அப்படி என்றால், ஒரு மனிதன் புலியைவிட மோசமாகவா நடந்து கொள்வான். புலியின் அன்பை நீ பெற்றது போலவே கணவனின் நேசத்தையும் பெற முயற்சிசெய்! என்று துறவி மென்மையாகச் சொன்னார்.

அவரின் வார்த்தைகளில் உள்ள உண்மையை உணர்ந்து நன்றி சொல்லி விடைபெற்றாள் அவ்ள்.

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

07.2014

09

- 455 - அவிட்டஸ் மேற்கு உரோமப் பேரரசின் மன்னனானான்.
- 1357 - புனித உரோமப் பேரரசர் நான்காம் சார்ல்ஸ் பிராகா நகரத்தில் சார்லஸ் பாலத்திற்கு அடித்தளம் நாட்டினார்.
- 1755 - பென்சில்வேனியாவில் பிரெஞ்சு மற்றும் குடியேற்ற துணை இராணுவக் குழு பிரித்தானியப் படைகளைத் தோற்கடித்தனர்.
- 1790 - பால்ட்டிக் கடலில் இடம்பெற்ற மோதலில் சுவீடனின் கடற்படையினர் ரஷ்யக் கப்பல்களை பெரும் எண்ணிக்கையில் கைப்பற்றினர்.
- 1810 - ஒல்லாந்து நாட்டை நெப்போலியன் தனது பிரெஞ்சு இராச்சியத்துடன் இணைத்துக் கொண்டான்.
- 1816 - ஆர்ஜென்டீனா ஸ்பெயினிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1863 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஹட்சன் துறைமுகம் மீதான தாக்குதல் முடிவுக்கு வந்தது.
- 1868 - அனைத்து ஆப்பிரிக்க அமெரிக்கர்களுக்கும் முழுக் குடியுரிமை வழங்கும் சட்டமூலம் ஐக்கிய அமெரிக்காவில் நிறைவேற்றப்பட்டது.
- 1900 - ஆஸ்திரேலிய கண்டத்தில் தனித்தனியே குடியேற்ற நாடுகளாக இருந்த மாநிலங்கள் ஆஸ்திரேலியப் பொதுநலவாயத்தின் கீழ் ஒன்றிணைக்க விக்டோரியா மகாராணி ஒப்புதல் அளித்தார்.
- 1903 - யாழ்ப்பாணத்தில் இந்து வாலிபர் அமைப்பு (YMHA) உருவாக்கப்பட்டது.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: நேச நாடுகள் சிசிலி மீதான தாக்குதலை ஆரம்பித்தனர்.
- 1948 - பாகிஸ்தான் தனது முதலாவது அஞ்சல் தலையை வெளியிட்டது.
- 1991 - 30 ஆண்டுகளின் பின்னர் தென்னாபிரிக்கா ஒலிம்பிக் விளையாட்டுக்களில் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டது.
- 1995 - யாழ்ப்பாணம் வலிகாமம் பகுதியில் இலங்கை இராணுவத்தின் முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.
- 2002 - ஆபிரிக்க ஒன்றியம் அடிஸ் அபாபாவில் அமைக்கப்பட்டது. தென்னாபிரிக்க ஜனாதிபதி தாபோ உம்பெக்கி இவ்வமைப்பின் முதலாவது தலைவரானார்.

2006 - 2006 உலகக் கிண்ணக் காற்பந்துப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இத்தாலி பிரான்சை வென்று நான்காவது தடவையாக உலகக்கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

2006 - அக்னி III ஏவுகணை ஒரிசாவில் சோதிக்கப்பட்டது. அதன் இரண்டாவது அடுக்கு இயங்க மறுத்தமையால் குறுகிய தூரத்தையே சென்றடைந்தது.

### பிறப்புகள்


- 1929 - ஏ. எம். ராஜா, பின்னணிப் பாடகர் (இ. 1989)
- 1930 - கே. பாலச்சந்தர், தமிழ் திரைப்பட இயக்குநர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இறப்புகள்

- 20[illegible] தமிழக எழுத்தாளர்

### கே.பாலச்சந்தர்



கே.பாலச்சந்தர் எனப் பொதுவாக அழைக்கப்படும் கைலாசம் பாலச்சந்தர் 1930 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9 ஆம் திகதி பிறந்தார். இவர் தமிழ்த் திரைப்பட இயக்குநர் ஆவார். இவர் மேடை நாடகத்துறையிலிருந்து திரைத்துறைக்கு வந்தவர். திரைத்துறையில் 1965 ஆம் ஆண்டு வெளியான **நீர்க்குமிழி** இவரது முதல் இயக்கமாகும். நாகேஷ் இதில் கதாநாயகனாக நடித்தார் .

இவருடைய பெரும்பாலான படங்களில், மனித உறவு முறைகளுக்கு இடையிலான சிக்கல்கள், சமூகப் பிரச்சினைகள் ஆகியவையே கருப்பொருளாய் விளங்கின.

அபூர்வ ராகங்கள், புன்னகை மன்னன், எதிர்நீச்சல், வறுமையின் நிறம் சிகப்பு, உன்னால் முடியும் தம்பி முதலியன இவர் இயக்கிய சிறந்த படங்களில் சிலவாகும். தமிழ்த் திரையுலகின் முக்கிய நடிகர்களான கமல் ஹாசன் மற்றும் ரஜினிகாந்தை அறிமுகம் செய்தவர். 1990களுக்குப் பிறகு **கையளவு மனசு** போன்ற பெரும் வரவேற்பை பெற்ற தொலைக் காட்சித் தொடர்களையும் இயக்கினார்.

"கவிதாலயா" என்னும் திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்தையும் நிறுவினார். இதன்மூலமாக பிற இயக்குநர்களின் கைவண்ணத்தில் பல திரைப்படங்களை அளித்துள்ளார். அவற்றில் நெற்றிக்கண், ராகவேந்தர். சிவா ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவருக்கு 1987ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருது கொடுக்கப்பட்டது. 2010ஆம் ஆண்டுக்கான தாதாசாகெப் பால்கே விருதுக்கு இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



93 …நெருக்கடி நிலைமை என்னும் அந்த நிர்ப்பந்த வாசத்தில் ஆயிரம் லத்திகளையும், துப்பாக்கிகளையும், சிறைக் கம்பிகளையும் உங்கள் பேனாவாலும் நாவாலும் மட்டுமே எதிர்கொண்ட பிரபஞ்சத் துணிச்சல் இருக்கிறதே- அதை நினைக்கும் போதெல்லாம் என் மேனி சிலிர்க்கும்; மின்சாரம் சுரக்கும்.

அந்தப் பதின்மூன்றாண்டு கால வனவாசம்தான் உங்கள் எழுத்துக்கும் பேச்சுக்கும் மனித மதிப்பீடுகளுக்கும் முன்னினும் அதிக பரிமாணங்களையும் பரிணாமங்களையும் பெற்றுத் தந்தது.

கூட்டுப்புழுவிற்குக் கூடு என்பது சமாதியல்ல; அதற்கு அது இன்னொரு கர்ப்பம்.

உங்கள் குறளோவியமும்- சங்கத் தமிழும், தமிழின் நீண்ட நெடிய இன இலக்கிய வரலாற்றில் உங்கள் பெயரை ஊழியாலும் பெயர்ந்து போகாத உளியால் செதுக்கியிருக்கின்றன.

'ஊழ்' என்பதை 'விதி' என்று புலப்படுத்தாமல் 'விளைவு' என்று புலப்படுத்தியிருக்கிறீர்கள்.

தருமரும், மணக்குடவரும், தாமத்தரும், நச்சரும் பரிமேலழகர் உள்ளிட்ட உரையாசிரியர்களும் சிந்தித்திருக்க முடியாத ஒரு சிந்தனையை நீங்கள் தந்ததன் மூலம் பதினோராம் உரையாசிரியராய் மரியாதை கெழுமிய மாண்பு பெறுகிறீர்கள்.

உங்கள் தனிமனித ஆளுமைகளையும் தலைமை கொள்ளும் ஆளுமைகளையும் அசைபோடும் போதெல்லாம், 'இவர் ஒர் அபூர்வமான கலவை' என்றே ஆச்சரியம் கொள்கிறேன்.

பூசிக்கும் பொருளாய்க் கிடந்த தமிழை அன்றாட வாழ்வில் நேசிக்கும் பொருளாய் நிலைக்க வைத்தவர் நீங்கள்.

அரை நூற்றாண்டு காலமாய் அறுந்து போகாத- இடைவேளையே இல்லாத உழைப்பு உங்கள் உழைப்பு.

தந்தையின் மரணத்தின் போதும் முதல் மனைவியின் மரணத்தின் போதும் மேடையில் கொள்கை விளக்கம் செய்துகொண்டிருந்த தியாகம் உங்கள் தியாகம்.

கோட்டையிலிருந்தாலும், கோபாலபுரத்திலிருந்தாலும், தான் ஒடுக்கப்பட்டவர்களின் தலைவன் என்பதை உறக்கத்திலும் மறந்துவிடாத உள்ளம் உங்கள் உள்ளம்.



பதின்மூன்று வருடப் பாலைவனப் புயலில் உதிரும் சருகுகளைப் பற்றிக் கவலைகொள்ளாமல் வேர்களைக் காப்பாற்றிய உழைப்பு உங்கள் உழைப்பு.

எந்த நிலையிலும்- எந்த மேடையிலும்- எத்தனை பேச்சாளர்கள் மத்தியிலும் முதன்மைப் பேச்சாளன் தான் தான் என்று முறியடித்து வென்று காட்டும் முனைப்பு உங்கள் முனைப்பு.

இலக்கியத்தின் எந்த வடிவத்தில் எழுதினாலும் தமிழ் மொழிக்கென்று ஆண்டாண்டு காலமாய் அமைந்து கிடக்கும் அழகியல் உணர்ச்சி (Aesthetic Sense) யை எப்போதும் குழைத்துக் காட்டும் எழுத்து உங்கள் எழுத்து.

உடலும் உள்ளமும் நலிவுற்ற காலையிலும் வானத்தின் நீலம்போல் எப்போதும் இழைந்திருக்கும் நகைச்சுவை உங்கள் நகைச்சுவை.

போலித்தனமாய் இல்லாமல் இந்த மண்ணையும் மனிதர்களையும் நிஜமாய் நேசிக்கும் நேசம் உங்கள் நேசம்.

வெற்றிகளால் கோட்டுக்கு வெளியே போய்விடாமலும், தோல்விகளால் கூட்டுக்குள்ளே போய்விடாமலும் சமப்படுத்திக் கொள்ளும் பக்குவம் உங்கள் பக்குவம்.


இவையெல்லாம் இனிவரும் தலைமுறை உங்களிடம் ஒவ்வொரு நாளும் படித்துக்கொள்ள வேண்டிய பாடம்.

திருவாரூர்த் தெருவில் உங்கள் பொது வாழ்க்கை ரதம் புறப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை உங்களின் ஒவ்வொரு நாளும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

எழுத்தாக- பேச்சாக- செயற்பாடுகளாக- சின்னங்களாக- அரசுக் கோப்புகளாக- அன்றாட வாழ்வியலாக- தமிழ்நாட்டின் மறுமலர்ச்சியாக- மாறுதல்களாக- கண்ணீராக- இரத்தமாக- வேர்வையாக- கையொப்பமாக- உங்களின் ஒவ்வொரு நாளுக்கும் பதிவு இருக்கிறது! *(முற்றும்)*

**-வைரமுத்து-**

# உங்கள் பிறந்த எண் 05 இல் கூட்டெண் 06 இன் பலன்கள்



34

### தோற்றம்

புதனுடன் சுக்கிரன் இணைந்து தரும் ஆதிக்கம். உயரமாக, கவர்ச்சியும் பெண்மையழகும் பொருத்தியவராக, சதை பிடித்த மென்மையான சரீரமுடன் மலர்ந்த முகத்துடன் சிரித்தபடியே காட்சி தரும் உல்லாச மனிதர் இவர். போர்வீரர் போல இருப்பார்.

பரந்த நெற்றியும் அடர்ந்த புருவமும் சிறிய அழகான மூக்கும் லேசான மாறு கண்ணும் பருத்த உதடுகளும் குண்டு முகமும் சதைப்பற்றுள்ள கன்னங்களும் மார்பில் லேசாகத் திரண்ட சதையும் பெண் போன்ற பின் பாகமும் உருண்டு திரண்ட கை, கால்களும் இருக்கும். வேகமாக பரபரப்புடன் நடப்பார். சற்றுக் குறைந்த சிவப்பாக இருப்பார்.

### குணம்

மிகவும் மகிழ்ச்சியுடன் இருக்கும் இயல்பினர். இவர்களை எல்லோருக்கும் பிடிக்கும். தெய்வ பக்தி உண்டு. உலக சுகப் பலன்களை யாசித்தே சுவாமி வணக்கம் செய்வர். பட்டுத் துணியும் பளபளப்பு வேட்டியும் அணிந்து பொட்டிட்டு, அலங்காரமாகத் தென்படுவார். நகை அணிவார். தைலம், வாசனைப் பூச்செல்லாம் பயன்படுத்துவார். பெண் தன்மை சிறிது இவர்களுடைய நடை உடை பாவனைகளில் இருக்கும்.

இவர்கள் சூதுவாதின்றிப் பேசிப் பழகுவர். சத்தம் போட்டுச் சிரிப்பர். பேசுவர். இவர்கள் செய்கை எதுவும் ரகசியமாக இருக்காது. இதனால் சிறு சிறு தவறுகள் செய்து மாட்டிக் கொண்டு அவமானப்படுவர். அதிலிருந்து பாடம் கற்று படிப்படியாக நல்லவராகி முழு ஒழுக்கத்தைப் பெற்றுவிடுவர்.

மேலான இலட்சியங்களுடன் ஒரு கவிஞராக இருப்பார். உணர்ச்சிவசப்படுவார். சுவையாக உண்ண நினைப்பார். நன்கு படாடோபமாக உடுத்த நினைப்பார். வசதியோடு வாழ விரும்புவார். ஐம்புலன் சுகம் விரும்பி ரசிகத் தன்மையுடன் வாழ்க்கையை நடத்த முயலுவார். இதனால் செல்வத்தை அடைய விரும்பும் இவர்கள் சுயநலமி போலப் படுவார். சில தப்பான வேலைகளிலும் ஈடுபடும் கட்டாயத்திற்குட்படுவார்.

தொழில்மேல் ஆசை கொண்டு இடைவிடாது உழைப்பர். ஆனாலும் சாப்பாட்டை விட மாட்டார். ஏனெனில் பசி தாங்க மாட்டார். உறங்காமலும் இருக்க முடியாது.

புகழாசை இருக்கும். பெரும் புகழை அடையும் தகுதி இவருக்கு உண்டு. நன்கு படிப்பு வரும். உதிரித் திறமைகளாக எழுத்தாற்றல், பேச்சாற்றல், பாட்டெழுதும், படம் வரையும் திறன்களும் இருக்கும். முன்னுக்கு வரும் ஆர்வம் இருக்கும். இவர்கள் செய்யும் எக்காரியத்திலும் இவருக்கு இலாபமிராது.

ரஜோ குணமும் சாத்விக குணமும் கலந்து இவரிடம் இருக்கும். நியாயத்திற்காகப் போராடுவர். நல்லனவற்றை விரும்புவார். மக்கள்நலம் விரும்புவார். பிறர் பசி பொறார். அனைவரும் நலம் பெற்று வாழ நினைப்பார். அழகை, கலையை ரசிப்பார். குழந்தைகளைப் பிரியமுடன் நடத்துவார். தம்மை நம்பியவரைக் கைவிடாமல் முடிந்தவாறு காப்பாற்றுவார்.

நன்றாக உழைக்கும் இவர் நன்றாக ஓய்வெடுக்கவும் தெரிந்தவர். இவர்கள் நண்பர்களை நன்கு பாராட்டி மதிப்பர். உறவினரைக் களிப்பூட்டி மகிழ்வர். பகை பாராட்டினால் விடாமல் மோதுவர். வெற்றியும் பெறுவர். தாராளமாகச் செலவு பண்ணுவார். நாடகம், சினிமா பார்ப்பார். எதையும் துறக்கும் மனம் வராது.

நல்ல அறிவு கலைகளிலும் உலக வாழ்விலும் உண்டு. காதலில் எளிதாக சிக்குவார். பெண்களை மிக விரும்புவார். பெண்களிடம் ஆதரவும் இவருக்குக் கிடைக்கும். பகையும், துன்பமும்கூட உருவாகும். பெண்களின் உடலழகைவிட உள்ளத்து அழகையே விரும்புவார். காதலுக்காக எதையும் இழக்கத் துணிவர். யோகம், தவம், தத்துவப் பாதையில் மனம் போகும். துறவறம் கூட இவருடைய நோக்கமாக வரலாம்.

### குடும்பம்

அடிதடிகளுக்குப் பின் சிலர் காதல் மணமுடிப்பர். சிலருக்கு மணமே ஆகாமலேயே போகும். மனமொத்தவருடன் நன்கு குடும்பம் நடத்திப் பிள்ளை குட்டிகளுடன் வாழ்வார். குடும்ப மகிழ்ச்சிக்காகக் கடன் வாங்குவர். பல வழிகளிலும் பணம் பண்ணுவர். வீடு, வாசல், ஏவல் செய்ய வேலைக்காரருடன் நன்றாக வாழ்வர். பல பெண்களை விரும்பித் தொடர்பு கொள்ளுவர். மனைவி குழந்தைகளையும் நேசிப்பர். உலக வாழ்வில் அனைத்தையும் பார்த்துவிட்டே போவர்.

### தொழில்

கலை சார்ந்த தொழிலுக்காக முதலிடம் தருவர். குறைந்த உடலுழைப்பில் நிறையப் பொருள் பண்ணும் வேலையைத் தேர்ந்தெடுப்பர். லாட்டரியில் பணம் அடிப்பர்.


இசை, நாட்டியம், இசைக்கருவி, நடன, நாடக சபாக்கள் சார்ந்த தொழிலும் செய்வர். பெண்களின் உபயோகப் பொருள் தயாரித்து விற்பர். பதிப்பகம், பத்திரிகை நடத்துவர். கல்யாண மண்டபம் நடத்துவர். ஆடம்பரப் பொருள் விற்பர். ஆடை புது முறையில் தைப்பவராக இருப்பர். சூதாடுவர். அல்லது சூதாட்ட கிளப் நடத்துவர். சினிமாக் கொட்டகை கட்டுவர். வாகனம் வாங்கி விற்றுத் தருவர். நல்ல சமையல் காண்ட்ராக்டர் ஆவர். தூதராக, நீதிபதியாக இருப்பர். பட்டு, வைர வியாபாரம், ஜோதிடம் தொழிலாகச் செய்வர். உணவு விடுதி நடத்துவர். புடவை வியாபாரம் பண்ணுவர். நடனக்காரர், பாடகர், இசை வாத்திய நிபுணர் என்று பணி புரிவர். மேக்கப் செய்பவர் ஆவர்.

### நோய்

மூட்டுக்களில் வலி, உடல் சோர்வு, சர்க்கரை நோய், சிறுநீரகக் கோளாறு, இதயப் பலவீனம், வாதத் தொடர்பான நோய், தொண்டையில் அறுவைச் சிகிச்சைக்கான நோய் எல்லாம் வரும். வயிறு வலிக்கும்.

**-கணித்தவர்-ஸ்வாமி-** *(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரணி
# கண்ணகை

# சம்புரே
# நவ
# கும்ப

## கும்பாபிஷேகம் ஆனி 25 ஆம் நாள் 09.07.2014 புதன்கிழமை காலை 8.3

### ஆசிச்செய்தி



வரலாற்றுச் சிறப்பு மிக்க வரணி அருள்மிகு சிட்டிவேரம் கண்ணகி அம்மன் கோவில் மஹா கும்பாபிஷேக நன்னாளில் ஆசி உரை வழங்குவதில் உவகை அடைகின்றேன்.ஈழத்தில் கண்ணகி வழிபாட்டில் முக்கியம் பெற்று நிற்கும் சிறப்பை பெற்று விளங்கும் சிட்டிபுர கண்ணகி அம்மன் அருளாசி அனைவருக் கும் கிடைக்கப் பெற இந் நன்னாளில் வேண்டுகின்றேன்.உலகத்தின் பல பாகங்களில் இருந்தும் அன்னையவள் ஆலயத்திற்கு பக்தர் கூட்டம் படை எடுப்பதென்பது அன்னையின் அருளையும் அற்புதத் தையுமே எடுத்தியம்புகின்றது. சிறப்பு மிக்க இன் நன்னாளில் மஹா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவதுடன் நாட்டில் உள்ள அனைவருக்கும் அன்னையவள் அருள் கிடைக்கப் பெற வேண்டி அமைகின்றேன்.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**
**நல்லை ஆதீன குரு முதல்வர்**

### சுட்டிபுரம் கண்ணகை அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம்



சிட்டிவேரம் கண்ணகை அம்மன் யாழ். மாவட்டத்திலுள்ள வரணி ஊரின் மத்தியில் கொடிகாமம் பருத்தித்துறை வீதியின் அருகில் உள்ள குளிர்ச்சி நிறைந்த சோலைவனத்தில் அமைந்து எல்லோருக்கும் அருள்பாலித்துக் கொண்டு இருக்கிறாள். நீண்ட வரலாறும் புராதன சிறப்புங் கொண்ட தெய்வீகப் பெருமையுடன் சிட்டிவேரம் கண்ணகி அம்மன் காட்சியளிக்கிறாள். குறிப்பாக அவளை எய்பன்றிகாடு சிட்டி வேரம் அம்மன் என்று அழைப்பார்கள். இன, மத, சாதி, மொழி பேதமின்றி வரணியின் அனைத்து கிராம மக்கள் மட்டுமன்றி ஈழத்தின் சகல இடங்களில் இருந்தும் அதனைவிட சர்வதேச நாடுகளில் இருந்தும் இங்கு வந்து வழிபட்டுவரும் அடியார்களுக்கு அருட்கடாட் சத்தினை வழங்கும் கண்ணகி தாயின் ஆலயம் ஈழத்தின் தலைசிறந்த கண்ணகி ஆல யங்களில் ஒன்றாகும்.

இச்சிறப்பு மிக்க தலத்தின் மகா கும்பாபிஷேகம் ஆடிமாதம் 9 ஆம் திகதி அம்மனின் அருளினால் சிறப்புற நடைபெறுகின்றது. நிகழ்வில் அடியார்கள் அனைவரும் கலந்து கொண்டு அம்பாளின் அருட்கடாட்சத்தினை பெறுவீர்களாக!

நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், முதலமைச்சர், வட மாகாணம்.

### வாழ்த்துச் செய்தி



தென்மராட்சியில் சைவத்தமிழ் நெறிகாத்து வரணிப்பதியில் அருட்கடாட்சத்தை சொரியும் சிட்டிவேரம் கண்ணகை அம்மன் மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு ஆசிச் செய்தி வழங்குவதில் ஆனந்த மடைகின்றேன்.பிரபஞ்சத்தின் தோற்றத்திற்கும் இயக்கத்திற்கும் ஒழுக்கத்திற்கும் காரணமான சக்தியை பெண்ணாக உருவகித்து வழிப டும் பெருமையுடையது எமது சமயம். இப்பெண் தெய்வ வழிபாட்டை வரணி பதியில் நிதர்சனமாக்குவதில் சிட்டிவேரம் கண்ணகை அம்மன் திகழ்கின்றது.

எம்மண்ணில் ஆன்மீக எழுச்சியும் சைவமும் தமிழ் பண்பாடும் காக்கப்பட்டு வருவதில் ஆலயங்கள் அடிப்படையாக அமைகின்றன. அந்த வகையில் எமக்கு வீரத்தையும் அநீதிக்கு எதிராக போராடும் சக்தியையும் தரும் தெய்வமாக வரணி ஊரின் நடுவே வீற்றிருந்து நல்லருள் புரியும் அம்பாளின் திருவருளால் எதிர்காலத்தில் எம்மண் விடிவுபெற்று அறநெறியில் சிறந்து விளங்கிடவும் சர்வலோக நாயகியாம் சிட்டிவேரம் அன்னையின் திருவருள் அனைவருக்கும் கிடைக்கவும் பிரார்த்திக்கின்றேன்.

**கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன்**

### பிரார்த்தனை



யாழ் மாவட்டத்தில் பசுமை பொழியும் வரணிக் கிராமத்தில் திருவ ருள். எழுந்தருளி அருள்பாலிக்கும்சிட்டிவேரம்கண்ணகை அம்மன்திருத்தலம் நீண்ட வரலாறும் புராதன சிறப்பும் கொண்ட தெய்வீகப் பெருமை மிக்கது. சிட்டிவேரம் கண்ணகை அம்மனை எய்பன்றிக்காடு சிட்டிவேரம் அம்மன் என்றும் அழைப்பார்களாம். வரணிக் கிராம மக்கள் மட்டுமின்றி ஈழத்தின் பல பாகங்களில் இருந்தும் வெளிநாடுக ளில் இருந்தும் இப்புனிதத் திருத்தலத்திற்கு வந்து வழிபட்டுவரும் அடியார்களுக்கு அருட்கடாட்சத்தினை வழங்கும் கண்ணகி தாய், ஈழத்தின் தலைசிறந்த கண்ணகி ஆலயங்களில் ஒன்றாகும்.

சிலப்பதிகாரக் கண்ண்கியின் வரலாற்றில் கண்ணகி கோபமுற்று சிலம்பு எறிந்த போது ஏழு முத்துக்கள் ஈழத்தின் பல்வேறு இடங் களிலும் பறந்துவந்து வீழ்ந் ததாகவும் அப்படி வீழ்ந்த இடங்கள் ஈழத்தின் ஏழு கண்ணகி அம்மன் திருத்தலங்களாக அருள்பெற்றதாகவும், அதில் சிட்டிவேரம் கண்ணகையும் ஒன்றாகும் என்றும் வரலாறு கூறுகின்றது. இவ்வாலயம் புராதன மற்றும் மரபுவழி வழிபாட் டுமுறையை பின்பற்றி வருகின்றது. அன்னையின் அருளினை நேரடியாக வந்து பெற்ற பல பக்தர்கள் உண ர்ந்ததினை அவர்களே தெரிவித்திருக்கின்றார்கள். இச்சிறப்புமிக்கத் திருத்தலத்தின் மகா கும்பாபிஷேகப் பெருவிழா ஆனி மாதம் 25 ஆம் நாள் (09-07-2014) அன்று அம்ம னின் அருளினால் சிறப்புற நடைபெறுகின்றது. நடக்கும் புனிதப் பெருநீராட்டலால் அம் மன் அருள் யாழ் மண் முழுதும் பரவிட வேண்டிப்பிரார்த்திக்கின்றோம்.

**இறைபணியில் கந்தையா நீலகண்டன் தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்.**

### அரசாங்க அதிபரின் வரழ்த்துச் செய்தி



தென்மராட்சியிலே வரணிப்பதியிலே வயல்களும் தென்னஞ்சோலைகளும் அமைந்துள்ள நிழல் விருட்சத்தில் சிட்டிவேரம் கண்ணகை அம்மன் கோயில் கொண்டருளி அடியா ர்க்கு அருள்பாலித்துக் தொண்டிருக்கின்றார்.சிட்டிவேரம் கண்ணகை அம்மன் தனது அடியார் களுக்கு நேரடியாக மூதாட்டி வடிவில் காட்சிகொடுத்ததாகவும் மதுரை மாநகரை எரித்த கண்ணகை அம்மன் தங்கிய ஏழாவது திருத்தலமாக சிட்டிவேரம் கண்ணகை அம்மன் திகழ் வதாகவும் வரலாறு கூறுகின்றது. இலங்கையின் வடபுலத்திறகு முதன்முறையாக சீர்காழி கோவிந்தராஜன் அவர் கள் வந்து பக்திப் பரவச மான பாடல்கள் பாடிய பெருமை இவ் அம்மன் கோவிலையே சாரும். இப்படியான புதுமையான அம்பா ளின் மகாகும் பாபிஷேக நிகழ்வுகள் 09.07.2014 அன்று இனிதே நடைபெறவும் அம்மாளின் அருட்கடாட்சம் அனைவ ருக் கும் கிடைக்கவும் எல்லாம் வல்ல அம்பாளை வேண்டி எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சுந்தரம் அருமைநாயகம், அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர், யாழ்ப்பாண மாவட்டம்**

### ஆளுநரின் செயலாளரின் வாழ்த்துச் செய்தி




சிட்டிவேரம் கண்ணகை அம்மன் திருத்தலம் யாழ். மாவட்டத்திலுள்ள வயல்களும் தோட்டங்களும் நிறைந்த வரணி ஊரின் மத்தியில் பருத்தித்துறை வீதியின் அருகில் உள்ள குளிர்ச்சி நிறைந்த சோலைவனத்தில் அமைந்து எல்லோருக்கும் அருகில் உள்ள குளிர்ச்சி நிறைந்த சோலைவனத்தில் அமைந்து எல்லோருக்கும் அருள்பாலித்துக் கொண்டு இருக்கிறாள். நீண்ட வரலாறும் புரதான சிறப்பும் கொண்ட தெய்வீக பெருமை யுடன் சிட்டிவேரம் கண்ணகி அம்மன் காட்சியளிக்கிறாள். குறிப்பாக இதனை எய்பன்றிகாடு சிட்டிவேரம் அம்மன் என்று அழைப்பார்கள். இன, மத, சாதி, மொழி பேதமின்றி வரணியின் அனைத்து கிராம மக்கள் மட்டு மன்றி ஈழத்தின் சகல இடத்தில் இருந்தும் அதனைவிட சர்வதேச நாடுகளில் இருந்தும் இங்கு வந்து வழிபட்டு வரும் அடியார்களுக்கு அருட்கடாட்சத்தினை வழங்கும் கண்ணகிதாய் ஈழத்தின் தலைசிறந்த கண்ணகி ஆலயங்களில் ஒன்றாகும் இவ்வாலயம் புரதான மற்றும் மரபு வழி வழிபாட்டு முறையை பின்பற்றி வருகின்றது.

சிலப்பதிகார கண்ணகியின் வரலாற்றில் கண்ணகி கோபமுற்று சிலம்பு எறியப்பட்ட போது ஏழுமுத்துக்கள் ஈழத்தின் பல்வேறு இடத்தில் பறந்து வந்து வீழ்ந்ததாகவும் இவ்வீழ்ந்த இடங்கள் ஈழத்தின் ஏழு கண்ணகி அம்மனாக அருள் பெற்றதாகவும் அது சிட்டிவேரம் கண்ணகியும் ஒன்றாகும் என்று வரலாறு கூறுகின்றது. அன்னையின் அருளினை நேரடியாக பல பக்தர்கள் உணர்ந்ததினை அவர்களே தெரிவிக்கின்றார்கள். இச்சிறப்பு மிக்க தலத்தின் மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் 25 நாள் ஆனி (09.07.2014) அம்மனின் அருளினால்-சிறப்புற நடைபெறுகின்றது. கும்பாபிஷேகம் இனிதே நடைபெற வாழ்த்துகின்றேன்.

***மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.***

**இ.இளங்கோவன், ஆளுநரின் செயலாளர், வடமாகாணம்.**

### வாழ்த்துச் செய்தி



வடமாகாணத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தில் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் சிட்டிபுரம் கிராமத்தில் சோலைகள் நிறைந்த இடத்திலே கொண்டெழுந்தருளியுள்ள சிலம்புடைத்த தேவி எனப்போற்றப்படும் கண்ணகித்தாய் குடிகொண்டிருக்கும் இடமே சிட்டிபுரம் அம்மன் கோயில் என அழைக்கப்படுகின்றது.

மதுரையை எரித்த கண்ணகித்தாய் சினங்கொண்டு இலங்கைக்கு வந்து ஒவ்வோர் இடமாக தங்கியிருந்து சினந்தணிந்து சென்றதாக வரலாறு தெரிவிக்கின்றது. அப்படி தங்கியிருந்த இடத்தில் ஒன்றுதான் வரணியில் உள்ள சிட்டிபுரம் கிராமமாகும். இப்படி வரலாற்றுப் பெருமை கொண்ட அன்னைக்கு இன்று புனருத்தாரண மகா கும்பாபிஷேகம் இடம்பெறுவது அம்பிகை அடியார்களுக்கு கிடைத்த பெரும் அருட்கடாட்சமாகும்.அடியார்களுக்கு நோய்தீர்க்கும் மருந்தாக நினைத்ததை நிறைவேற்றும் தாயாக மனதுக்கு ஆறுதல் கொடுக்கும் அன்னையாக காட்சி கொடுக்கும் அன்னையவளை நினைத்து மக்கள் தமக்கு ஏற்பட்ட நோய் தீர்க்க வேண்டுமென்றும் நினைத்த காரியம் நடக்க வேண்டுமென்றும் அன்னைக்கு விரதம் இருந்து தமது நேர்த்திகளை நிறைவேற்றிக் கொள்கின்றார்கள். பசுக்களும் சோலையும் நிறைந்த இடத்தில் அமர்ந்திருக்கும் அன்னையவளுக்கு இன்று மகா கும்பாபிஷேகம் சிறந்த முறையில் நடைபெறவேண்டு மென்று வாழ்த்தி இறைவன் பாதம் பணிகின்றேன்.

**த.குருகுலராசா, அமைச்சர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாண சபை.**

### வாழ்த்துச் செய்தி



இலங்கை திருநாட்டின் யாழ்ப்பாணத்தில் தென்மராட்சி பிரதேசத்தில் வந்தாரை வாழ வைக்கும் வரணியூரில் வீற்றிருந்து நல்லாட்சி புரிந்து எமக்கெல்லாம் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் சிட்டிவேரம் கண்ணகை அம்மனின் மஹா கும்பாபிஷேகம் நடைபெ றும் இந் நன்நாளில் அனைவரும் அன்னையின் அருளை பெறவேண்டி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் பாதார விந்தங்களை பணிந்து அன்னையின் ஆலய பரிபாலன சபை சார்பில் வாழ்த்துகின்றேன். எல்லா உலகுமானாய் தாயே!

**தலைவர், ம.சின்ராசா, சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபை, வரணி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# னி அருள்மிகு சிட்டிவேரம்
# கை அம்மன் தேவஸ்தானம்
# (சுட்டிபுரம்)
# புரோக்ஷண அஷ்டபந்தன
# நவகுண்டபக்ஷ மஹா
# ம்பாபிஷேக சிறப்பிதழ்

லை 8.37 முதல் 9.57 வரையும்

-12 ஆம் திருவிழா உபயகாரர்கள்-



ஜன் அவர்கள்
மையான அம்பா
ட்சம் அனைவ
காள்கின்றேன்.
மாவட்டம்



டு சிட்டிவேரம்
கிராம மக்கள்
வந்து வழிபட்டு
ஆலயங்களில்
ஏழுமுத்துக்கள்
ஏழு கண்ணகி
கூறுகின்றது.
விக்கின்றார்கள்.
4) அம்மனின்
றேன்.



ருந்த இடத்தில்
அன்னைக்கு
டைத்த பெரும்
யாக மனதுக்கு
தமக்கு ஏற்பட்ட
விரதம் இருந்து
றந்த இடத்தில்
டைபெறவேண்டு
ற மற்றும்



பை, வரணி.

### வாழ்த்துச் செய்தி




இறைவனின் அருட்சக்தியாக விளங்குபவள் சக்தி. இச்சக்தியானவள் பல வடிவங்களில் நின்று உயிர்களுக்கு அருள்பாலிக்கின்றாள். அந்தவகையில் யாழ்ப்பாண மாவட்டத்தின் வரணி பிரதேசத்தில் பழைமைமிக்க ஆலயங்களில் ஒன்றாக சிட்டிவேரம் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. இவ் ஆலயத்தில் நடைபெறவுள்ள மகா கும்பாபிஷேகத்திற்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் சிலம்பிலிருந்து சிதறிய ஏழு முத்துக்கள் இலங்கையில் பல இடங்களில் விழுந்ததாகவும் அவற்றில் ஒன்று விழுந்த தலமாக இத்தலம் விளங்குகின்றது என்றும் கூறுவர். இத்தலத்தை எய்பன்றிக்காடு சிட்டிவேரம் அம்மன் என்றும் அழைப்பர். வரணி பிரதேச மக்களால் மட்டுமல்லாது இலங்கையின் அனைத்து பாகத்திலிருந்தும் மக்கள் வந்து அம்மனைத் தரிசித்து அருள் பெற்றுச் செல்வர்.

ஆலயங்கள் மக்கள் மத்தியில் ஆன்மீகத் தத்துவங்களைப் புரிந்து கொள்ள வைப்பனவாகவும், நமது பாரம்பரிய பண்பாட்டு மரபுகளைப் பேணி வளர்க்கும் நிலையங்களாகவும் விளங்குகின்றன. இதன் மூலமாக இளம் சந்ததியினரிடையே சமய, கலை, கலாசார விழுமியங்களைப் பரவச் செய்யும் பணியைச் செய்கின்றன. இத்தகைய உயரிய பணிகளைச் செய்யும் ஆலயங்களைப் புனரமைத்து கும்பாபிஷேகம் செய்து பராமரிப்பது கட்டாயமான தேவையாகும்.

அந்த வகையில் வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகத்தை சிறப்புற நடாத்தவுள்ள ஆச்சாரிய பெருமக்களுக்கும், செம்மையாக ஒழுங்கமைத்த ஆலய பரிபாலன சபையினருக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன். எல்லாம் வல்ல ஸ்ரீ கண்ணகையம்மனின் அருள்பெற்று அனைவரும் இன்பமாக வாழ வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**சாந்தி நாவுக்கரசன், பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.**

### அன்னையின் அருள் அகிலம் எங்கும் பரவட்டும்



வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாளுக்கு இன்று மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு நாமெல்லாம் பேரானந்தமடைகின்றோம். கண்ணகை அம்பாள் என்ற மூர்த்தியும் சிட்டிவேரம் என்ற தலமும் தும்புருவில் என்ற தீர்த்தமும் பாலை என்ற தல விருட்சமும் விளங்க மூர்த்தி தல தீர்த்த விசேடணங்கள் ஒருங்கே அமையப் பெற்றதாக எமது ஆலயம் விளங்குகின்றது.

பல்லாயிரம் வருடங்களிற்கு முன்பு பல சித்தர்கள் தும்புருவிலில் தீர்த்தமாடி சோலைக்குள் அமர்ந்து அம்பாளை வேதித்து வந்ததால் சிட்டிவேரம் என்ற திவ்விய நாமத்தைப் பெற்றுக் கொண்டது எமது ஆலயமாகும். பின்பு மருவி செல்லமாக சுட்டிபுரம் என அழைத்து வருகின்றோம். பஞ்ச பூதங்களைக் கடந்து நிற்கும் அன்னையை ஆகாயம், வாயு, அக்கினி, நீர் என்ற ஒழுங்கிலே பக்தியுடன் அழைத்து வந்து மஹா கும்பத்திலே எழுந்தருளச் செய்து பின்பு காலாதி காலமாக நிலைத்திருந்து அருள் சுரக்கக் கூடிய பிருதுவி அம்சமான விக்கிரகத்திலே மஹா கும்பாபிஷேகத்தினூடாக இன்று எழுந்தருளச் செய்கின்றோம்.

இந்தவேளை அம்மா காத்திடுவாய் என்று திருப்பாதம் பணிந்து அன்னையின் பேரருளை வேண்டுவோம். அறமே வெல்லும் என்பதை உணர்ந்து அறநெறி நின்று ஆலயமும் சமூகமும் சிறக்க பணிசெய்வோம். இன்றைய நன்நாளில் உலகமெங்கும் சாந்தியும் சமாதானமும் அமைதியும் நிலைக்க அன்பும் அருளும் பெருக அன்னையைப் பிரார்த் திப்போமாக.

**வரணியூர் சைவப் புலவர், சி.கா.கமலநாதன் J.P., அதிபர், வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய அறநெறிப் பாடசாலை.**

### நாவற்காடு கிராம உத்தியோகத்தரின் ஆசிச்செய்தி



வரணி எயிப்பன்றிக்காடு சிட்டிவேரம் அருள்மிகு கண்ணகை அம்பாளின் கும்பாபிஷேகத்தை ஒட்டி மேற்படி ஆலய 12 ஆம் திருவிழா உபயகாரர்களினால் வெளியிடப்படும் கும்பாபிஷேக மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி யடைகின்றேன். இவ் ஆலயம் 1812 ஆம் ஆண்டு இவ்விடத்தில் நிலை கொண்டு வரணி மக்களின் நோய் பிணிகள், துன்பதுயரங்கள் தீர்த்து அருள் பாலிக்கும் அம்பாளின் கும்பாபிஷேக நிகழ்வையொட்டி அவள் பெருமையை வெளிப்படுத்தும் இம்மலர் வெளியீட்டுக்குழுவிற்கு பாராட்டைத் தெரிவிப்பதோடு எனது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நடராசபிள்ளை இராசகுமாரன், கிராம உத்தியோகத்தர் J/338 நாவற்காடு வரணி.

### நம்பியவர்களை வாழ்விக்கும் தாய்



வரணி எனும் புண்ணிய பதியில் தொழுவார் துன்பம் நீக்கி நல்லருளை எப்போதும் நல்கி எழுந்தருளியிருக்கும் சிட்டிவேரம் கண்ணகை அம்பாளுக்கு இன்று மஹா கும்பாபிஷேகம் செய்கின்ற தெய்வீகப் பணி அடியேனுக்கு கிடைத்ததையிட்டு பேரானந்தமடைகின்றேன்.

கண்ணகை உறைந்த புண்ணிய பீடங்களிலே பஞ்சபீடமாக விளங்குவது எமது தலமாகும். வந்தாரை வாழ வைக்கும் வரணி மக்கள் எல்லோருடைய நம்பிக்கைக்குரிய அன்னையாகத் திகழ்கின்றார். பாடிப் பணிவார்க்கு ஏழிசை ஞானமும் எல்லா வளமும் வழங்குபவர் எம் தாயாராகும். சீர்காழி கோவிந்தராஜன் ஈழத்திற்கு முதலில் வந்து பாடிப் பணிந்த தெய்வீகத் தலமாகும்.

திருவிழா என்றால் சுட்டிபுரம்தான் என்று உலகம் புகழ்கின்ற தலம். சோலைக்குள் அமர்ந்து வணங்க கோடி பலன்தரும் தாயார். இவ்வாறு சொல்லால் வர்ணிக்க முடியாத எண்ணற்ற சிறப்புக்களை உடைய எமது அம்பாளிற்கு இன்று திருக்குடமுழுக்கு நிகழ்வது எல்லோரும் பார்க்க வேண்டிய அருங்காட்சியாகும்.

மேலும் நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலைத்து எல்லா உயிர்களும் இன்புற்றிருக்க வேண்டும் என்று அம்பாளை வேண்டுகின்றேன்.

*மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்*

**ஸ்ரீ சக்தி கிரியா குருமணி, சிவ ஸ்ரீ இ.குமாரசுவாமிக் குருக்கள் பிரதிஷ்டா பிரதம குரு, வரணி சிட்டிவேரம் கண்ணகை, அம்மன் ஆலயம்.**

### பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



சீர்மிகு தென்மராட்சிப் பதியில் அருள் நிறை ஆட்சி புரியும் எம் சிட்டிவேரம் கண்ணகை அம்மனின் அருளும் அன்பும் அளக்க முடியாத சிறப்பிற்குரியவையாகும்.

வரணி நற்பதியில் மேவி மலிவனம் சுரக்கும் வரத்தை நல்கி அடியார் மனங்களை வென்றிட்ட அன்னையே! உன் திருநாமமும் திருவருளும் வற்றா கடலம்மா.

அன்னையே சிட்டிவேரம் கண்ணகை தாயே! உனது ஆலய கும்பாபிஷேகம் உலகுக்கு நன்மை தரும் நாளாய் அமையவேண்டும். தீயன அழிவடைந்து நன்மை தரும் திருநாளாய் அமைந்திட வேண்டும். தென்மராட்சி மக்கள் தவத்திற்கான பலன் அடைந்த நாள் இதுவே. வரம் அருள் அன்னையே உன் அருளால் நாம் வாழ்வோம் என்றுமே.

**திருமதி. சாந்தசீலன் அஞ்சலிதேவி, பிரதேச செயலர், தென்மராட்சி**

### தல மகிமை



எமது இனிய இலங்கை நாட்டில் இந்துக்களாக பிறந்த எவரும் வரணி சுட்டிபுரம் அம்பாளின் மகிமையை அறியாமல் இருக்க முடியாது. திருவிழாக்களின் பெருமை அத்தகையது. குறிப்பாக வரணி நாவற்காடு மக்கள் நடத்தும் 12 ஆம் திருவிழாவின்போது அம்பாள் வீதியுலா வரும் காட்சியில் ஒரு விசேடம். அதுவே சப்பறத்தில் சாத்துப்படியில் அம்பாள் உருவத்தில் தனி ஒளி வீசுவதோடு புதுப்பொலிவும் காணப்படுவதாகும். இது பாரம்பரியம்.

சுட்டிபுரம் திருவிழாவிற்கு இந்தியாவின் புகழ்பூத்த நாதஸ்வர வித்துவான்களான திருவாவடுதுறை இராசரத்தினம் பிள்ளை, காரைக்குறிச்சி, அருணாசலம் போன்றோரும் இசைக்கலைஞரான சீர்காழி கோவிந்தராஜன் போன்றோரும் முதன்முதலாக வருகை தந்திருந்தனர். இலங்கையிலுள்ள கலைஞருள் சுட்டிபுரம் வராத எந்த வித்துவான்களும் இல்லை என்றே கூறலாம்.

மக்களின் நேர்த்திகளை தனது அருளால் தீர்க்கும் மகிமை கொண்ட இந்த கண்ணகை அம்பாள் ஒரு தடவை சிவயோகராசா என்ற ஒருவருக்கு 2 வயதில் கண்ணில் வந்த கான்சர் நோயை கொழும்பு வைத்திய நிபுணர்கள் கைவிட்டு வீட்டுக்கு அனுப்பியபோது இவ் அம்பாளே தஞ்சமென கோவிலில் வைத்திருந்தனர்.

3 நாட்களில் பெரிய மோதகம் அளவில் காட்சி தந்த இடதுகண் படிப்படியாகக் குறைந்து ஒருவாரத்தில் முற்றாக மாறியது. இந்தநோய்க்கு உரியவர் இன்றும் 50 வயதில் திடகாத்திரமாக இருக்கிறார்.

இப்படியாக அருள் பாலிக்கின்ற அம்பாளை தரிசிக்க வருபவர்கள் நிம்மதியோடு போவர்.

இப்படியான மகிமைகொண்ட அம்பாள் வயல் சூழ்ந்த சுட்டிபுரம் என்ற இடத்தில் மரச்சோலைகளின் மத்தியில் கோயில் கொண்டிருக்கின்றார். இக்கோவிலின் கும்பாபிஷேகம் கோலாகலமாக இன்று நடைபெற இருக்கின்றது. இக்கும்பாபிஷேகம் சிறப்புற நடக்க அம்பாளை பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**சிற்றம்பலம் துரைராசா, கௌரவ தவிசாளர், சாவகச்சேரி பிரதேச சபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தூசு தட்டப்படும் இந்திய வெளிவிவகாரக் கொள்கை!

இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளிவிவகாரக்கொள்கையில், மாற்றங்கள் வரலாம் என்று எதிர்பார்க்கப்பட்டதொரு சூழலில், கடந்த மாதம் 23 ஆம் திகதி புதுடில்லியில் ஒரு முக்கிய கூட்டம் நடந்திருந்தது.

அந்தக் கூட்டத்துக்கு, அண்டை நாடுகளைச் சேர்ந்த அதாவது, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், மாலைதீவு, ஆப்கானிஸ்தான், சீனா மற்றும் மியன்மார் ஆகிய நாடுகளில் பணியாற்றும்; இந்தியத் தூதுவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

முதலில், இந்தக் கூட்டத்துக்கு இந்திய வெளிவிவகாரச் செயலர் சுஜாதாசிங்கே தலைமை தாங்குவார் என்று கூறப்பட்டது. ஆனால், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் தான், அதற்குத் தலைமை தாங்கியிருந்தார். காலை தொடக்கம் மாலை வரை நடந்திருந்தது அந்தக்கூட்டம்.

ஒவ்வொரு தூதுவராக தான் பணியாற்றும் நாடுகளின் நிலவரங்கள், அந்த நாட்டுடன் இந்தியா கொண்டுள்ள உறவின் தன்மை, அங்கு எதிர்கொள்ளப்படும் சவால்கள் மட்டுமின்றி அந்தந்த நாடுகளில் அரசாங்கங்களுக்குப் புறம்பான தரப்புகளுடன் இந்தியா கொண்டுள்ள உறவுகள் குறித்து விபரித்தனர்.

அவர்கள் கூறுவதை பொறுமையாகச் செவிமடுத்துக்கொண்டிருந்தார் வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ். அனைத்து தூதுவர்களும், கருத்துக்களைக்கூறி முடித்த பின்னர், சுஸ்மா சுவராஜ் உரையாற்றினார். அவரது உரையைக் கேட்டு, அங்கிருந்த ராஜதந்திரிகள், ஆச்சரியத்தில் ஆழ்ந்து போயினர்.

காரணம், தூதுவர்கள் விளக்கமளித்த போது, அவர் எந்தக் குறிப்பையும் எடுத்துக் கொண்டிருக்கவில்லை. ஆனால், அவற்றையெல்லாம் சுருக்கமாக தனது உரையில், குறிப்பிட்டது, ராஜதந்திரிகளை மலைக்கச் செய்துவிட்டது.

அதுமட்டுமின்றி அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரிகள் அனைவருக்குமே ஒரு எதிர்பார்ப்பு இருந்தது.

அதாவது, புதிதாகப் பதவியேற்ற நரேந்திரமோடி அரசாங்கம், இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையில், அயல்நாடுகளுடனான உறவுகளைக் கையாள்வதில், சில மாற்றங்களைச் செய்யலாம் என்று அவர்கள் எதிர்பார்த்தனர்.

அதுபற்றி, சுஸ்மா சுவராஜ் அறிவிப்பார் என்று எதிர்பார்த்தவர்களுக்கு ஏமாற்றமே அளித்தது. ஏனென்றால், அண்டை நாடுகளுடனான வர்த்தக, ராஜதந்திர உறவுகளைப் பலப்படுத்துவது குறித்து மட்டுமே அவர் பேசினாரே தவிர, அதில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து எதையும் கூறவில்லை.

அதுவும் இந்திய அதிகாரிகளுக்கு ஆச்சரியத்தைக்கொடுத்தது. நரேந்திரமோடி அரசாங்கம், பதவிக்கு வந்து ஒருமாதம்தான் ஆகிறது. இத்தகைய நிலையில், நிலைமைகளை உன்னிப்பாக கவனிப்பதில், விவகாரங்களை ஆழமாக ஆராய்வதில்தான் கூடுதல் கவனம் செலுத்தப்படுகிறது என்பதற்கு இது ஒரு உதாரணம்.

இந்திய பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்கும் நிகழ்வுக்கு சார்க் நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அது அயல்நாடுகளுடனான உறவுகளுக்குப் புதிய அரசாங்கம் முக்கியத்துவம் அளிக்கும் என்பதை வெளிப்படுத்திய முதல் சமிக்ஞை. அதேவேளை, அந்தச் சந்திப்புக்குப் பின்னர் இந்திய அரசாங்கம் அயல் நாடுகளுடன் புதிதாக எந்த முன்முயற்சிகளிலும் ஈடுபடவில்லை.

நரேந்திரமோடி தனது முதல் வெளிநாட்டுப் பயணத்தைப் பூட்டானுக்கு மேற்கொண்டதும், சுஸ்மா சுவராஜ், பங்களாதேஷ் சென்றதும்தான், அயல்நாடுகள் விடயத்தில் இந்தியா கடந்த ஐந்தாறு வாரங்களில் மேற்கொண்டுள்ள ராஜதந்திர முனைப்புகளாகும்.

இது எதனைக் காட்டுகிறது என்றால், புதிய இந்திய அரசாங்கம், அயல்நாடுகள் மற்றும் வெளிநாடுகள் விடயத்தில் நிதானமாகவும் பொறுமையாகவும் விவகாரங்களைக் கையாள முனைகிறது என்பதேயாகும். இலங்கை விவகாரத்தில்கூட இந்தியா எடுத்தேன் கவிழ்த்தேன் என்று எதையும் செய்வதற்குத் தயாராக இல்லை. இலங்கை விவகாரத்தில் இந்தியாவுக்கு பல்வேறு சிக்கல்கள் உள்ளன.

முதலாவது– மீனவர்களின் பிரச்சினை. இரண்டாவது– இலங்கைத் தமிழர் பிரச்சினை. மூன்றாவது– பாகிஸ்தான் தீவிரவாதப் பிரச்சினை. நான்காவது– வர்த்தகம் தொடர்பான பிரச்சினை.

இந்த நான்கு பிரச்சினைகளில் எதுபற்றியுமே இந்திய அரசாங்கம் இன்னமும் ஆழமாக கையாளத் தொடங்கவில்லை.

நரேந்திரமோடியின் பதவியேற்புக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச புதுடில்லி சென்று வந்ததுடன் எல்லாம் சரி.

அதற்குப் பின்னர், கொழும்பில் இருந்து புதுடில்லிக்கோ, டில்லியில் இருந்து கொழும்புக்கோ எந்தப் பயணமும் இடம்பெறவில்லை.

எனவே, இலங்கைத் தமிழர் பிரச்சினை விவகாரத்தில் நரேந்திரமோடி அரசாங்கம் மெத்தனமாக நடந்துகொள்வதாகவோ, அக்கறையின்றி இருப்பதாகவோ கருத முடியாது. நிலைமைகளை கவனிப்பதற்கே இந்தியா முன்னுரிமை கொடுக்கிறது.

அதேவேளை, இந்த மாத நடுப்பகுதியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களை புதுடில்லிக்கு அழைத்துப்பேச இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இணங்கியுள்ளதாக கூறப்படுகிறது.

நரேந்திர மோடிக்கு வாழ்த்து தெரிவித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும், வடமாகாண முதல்வரும் அனுப்பிய கடிதங்களில் அவரைச் சந்திப்பதற்கு அனுமதி கோரப்பட்டது. அதற்குச் சாதகமான பதில் கிடைத்துள்ளதை கூட்டமைப்பு உறுதிப்படுத்தியுள்ளது. எனினும், சந்திப்புக்கான இறுதியான நாள் இன்னமும் குறிக்கப்படவில்லை.

எவ்வாறாயினும், நரேந்திர மோடி அரசாங்கம் பதவியேற்ற குறுகிய காலத்துக்குள்ளே இந்தச் சந்திப்புக்கு அழைப்பு விடப்படுவது, இலங்கைத் தமிழர் பிரச்சினை விடயத்தில் கொண்டுள்ள ஈடுபாட்டை வெளிப்படுத்துவதாகவே கருதலாம்.

ஏனென்றால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை நரேந்திரமோடி சந்தித்தது ஒரு பொதுவான நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் தான். ஆனால், அதற்குப் பின்னர், இலங்கை அரசின் எந்த அமைச்சருடனோ அல்லது இராஜதந்திரிகளுடனோ இந்தியா கலந்துரையாடல் எதையும் நடத்தாத நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்திக்க விருப்பதை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது.

இலங்கையுடன் இந்தியா கொண்டுள்ள நான்கு முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றான, தமிழர் பிரச்சினைக்குத்தீர்வு காண்பதற்கே முன்னுரிமை கொடுக்கப்படுகிறது என்றே இதனைக் கருதலாம்.

அதேவேளை, இந்தியாவின் புதிய அரசாங்கம், தமிழர் பிரச்சினை தொடர்பாக ஆழமான எந்தக் கருத்தையும் வெளியிடத்தயங்கி வருகிறது.

சுஸ்மா சுவராஜ் தலைமையில் நடந்த கூட்டத்தில், இலங்கைப் பிரச்சினை குறித்து ஆராயப்பட்டதா என்று கடந்த முதலாம் திகதி இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சையட் அக்பருதீனிடம் கேள்வி எழுப்பப் பட்டது.

அதற்கு அவர் இலங்கை விவகாரம் குறித்து பேசப்பட்டது என்றும், மீனவர்களின் மனிதாபிமானப் பிரச்சினை தொடர்பாக இலங்கையுடன் பேசவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். தமிழர் பிரச்சினை குறித்து பேசப்பட்ட விவகாரங்களை அவர் மிகக் கவனமாகத் தவிர்த்திருந்தார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் கலந்துரையாடாமல், அவர்களின் கருத்துக்களை செவிமடுக்காமல், எந்தக் கருத்தையும் வெளியிட நரேந்திரமோடி அரசாங்கம் தயங்குகிறது என்பதையே இது காட்டுகிறது.

அதேவேளை தீவிரவாதப் பிரச்சினை விடயத்தில் இலங்கையுடன் இந்தியா நிறைய ஒத்துழைப்புகளை எதிர்பார்க்கிறது.

குறிப்பாக, பாகிஸ்தான் தீவிரவாதிகள், இலங்கை வழியாக இந்தியாவுக்குள் ஊடுறுவுவதைத் தடுப்பதற்கு இலங்கை உதவ வேண்டும் என்று இந்தியா கருதுகிறது.

சென்னையிலும் பெங்களூரிலும் அமெரிக்க, ஸ்ரேலிய தூதரகங்களின் மீது பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாக வெளியான தகவல்களும் இந்தியா மீதான தாக்குதல் திட்டத்துக்கு கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகம் தளமாகப் பயன்படுத்தப்படுவதாக கிடைத்த தகவலும் இந்தியாவுக்கு அதிர்ச்சியான விடயங்கள்.

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச இந்தியாவுக்கு எதிராக் பாகிஸ்தான் தீவிரவாதிகள் இலங்கையைத் தளமாகப் பயன்படுத்தவில்லை என்று மறுத்திருந்தாலும், அதனை நம்ப இந்தியா தயாராக இல்லை.

இத்தகைய நிலையில் இந்தியா தனது பாதுகாப்பை உறுதிப்படுத்த, இலங்கையுடன் நெருங்கிப் பணியாற்றியே ஆக வேண்டிய நிலையில் உள்ளது. அந்தக் கண்ணோட்டத்தை பலரும் மறந்து விடுகின்றனர். ஏதோ ஒரு விடயத்தில் எடுக்கப்படும் முடிவானது, இலங்கையுடன் இந்தியா கொண்டுள்ள பலபரிமாண உறவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில்தான் புதுடில்லியின் எத்தகைய முடிவும் அமையும்.

ஒரேயடியாக இலங்கையை இந்தியா பகைத்துக்கொள்ளவும் மாட்டாது. அதேவேளை, தனது இலக்குகளை அடைவதற்குத்தடையாக இருக்கும் விடயங்களில் விட்டுக் கொடுக்கவும் மாட்டாது. புதுடில்லியில் அயல் நாடுகளிலுள்ள இந்தியத் தூதுவர்களை அழைத்து சுஸ்மா சுவராஜ் பேச்சு நடத்திய தன் பின்னர், கடந்த 28 ஆம் திகதி சனிக்கிழமை விடுமுறை நாளாக இருந்தபோதும், இந்திய வெளிவிவகார அமைச்சின் சவுத் பிளொக், ஜவஹர்லால்நேரு பவன், சாஸ்திரி பவன் கட்டடங்கள் களை கட்டியிருந்தன.

அன்று எல்லா முக்கிய அதிகாரிகளும், பணிக்கு வந்திருந்தார்கள். அவர்களுடன் கூடவே முன்னாள் ராஜதந்திரிகளும் வந்திருந்தனர். காரணம் 25 ஆண்டுகளாக இந்திய வெளிவிவகார அமைச்சில் தேங்கிக் கிடந்த கோப்புகள், தேவையற்ற ஆவணங்கள் அனைத்தும் ஒன்று சேர்க்கப்பட்டு ஆவணக்காப்பகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

வெளிவிவகார அமைச்சு சுத்தம் செய்யப்பட்டு புதுப்பொலிவு பெற்றது. அதன் பின்னர்தான், தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கு புதுடில்லி வருமாறு அழைப்பு விடப்பட்டதாகத் தெரிகிறது. அதுமட்டுமின்றி, இதன்பின்னர்தான் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் புதுடில்லிக்கான பயணமும் திட்டமிடப்பட்டுள்ளது.

அவர் இந்தமாதம் புதுடில்லி செல்வார் என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சையட்அக்பருதீன் தெரிவித்துள்ளார். கடந்த 28 ஆம் திகதி இந்திய வெளிவிவகார அமைச்சில் நடந்த துப்புரவுப்பணி, இந்திய வெளிவிவகாரக் கொள்கையைத் தூசுதட்டிப் புதுப்பிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட ஒரு அடையாளச் சமிக்ஞையாகவே பார்க்கப்படுகிறது. அது உண்மையா என்பதைப்பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

எவ்வாறாயினும் இந்திய அரசாங்கம், பதவியைப் பொறுப்பேற்ற பின்னர் ஒரு குறிப்பிட்ட காலத்தை மட்டும்தான், கண்காணிப்புக் காலமாக கொண்டிருக்க முடியும். இதையே நிலையான கொள்கையாக வைத்திருக்க முடியாது.


அதுவும் மன்மோகன் சிங், அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கையை பலவீனமானது என்று குற்றஞ்சாட்டியவர் நரேந்திர மோடி. எனவே, அவரது அரசாங்கம், எப்படியாவது இந்தப் பழைய கொள்கைகளை தூசு தட்டியே ஆகவேண்டியிருக்கும். அது, இலங்கைத் தமிழர்களுக்கு பயனளிக்குமா இல்லையா என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

-ஹரிஹரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறைச்சம்பவங்கள் பொருளாதார ரீதியான பின்னடைவுகளுக்கு வழியமைக்கும்

## அமைச்சர் வாசு தெரிவிப்பு



அளுத்கம, பேருவளை சம்பவங்களுக்கான பொறுப்பினை நிராகரித்தல் மட்டும் போதுமானதல்ல என தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆளும் கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் கடும்போக்குவாதத்தை எதிர்த்து வருகின்றனர்.

அதிக எண்ணிக்கையிலான அமைச்சர்கள் முஸ்லிம் விரோத செயற்பாடுகளை அங்கீகரிக்கவில்லை.

இன,மத நல்லிணக்கத்துடன் கூடிய சமூகமொன்றை கட்டியெழுப்ப வேண்டும் என்பதே பலரின் நோக்கமாகும்.

அளுத்கம பேருவளை சம்பவங்களுடன் தொடர்பு கிடையாது என தெரிவித்து பொறுப்புக்களை நிராகரிப்பதனை விடவும், அதற்கான காரணிகளை கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறான வன்முறைச் சம்பவங்கள் சர்வதேச ரீதியில் நாட்டுக்கு களங்கத்தை ஏற்படுத்தக் கூடும் எனவும், குறிப்பாக பொருளாதர்ர ரீதியான பின்னடைவுகளுக்கு வழியமைக்கும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படுவதாக சர்வதேச ரீதியில் பிரசாரம் செய்யப்படுவது ஆரோக்கியமானதல்ல.

அளுத்கம பேருவளை சம்பவங்களுடன் தொடர்பு கிடையாது என்ற அரசாங்கத்தின் வாதத்தை அர்த்தபூர்வமானதாக மாற்ற வேண்டுமாயின் இரண்டு விடயங்கள் துரித கதியில் செய்யப்பட வேண்டும். குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை விதிக்கும் நோக்கில் உடனடியாக பக்கச் சார்பற்ற விசாரணைகள் நடத்தப்பட்டு, குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும். எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதனை தடுக்க நடவடிககை எடுக்கப்பட வேண்டுமெனவும அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

# சர்வதேச சட்ட விதிகளுக்கமையவே அகதிகளை நாடு கடத்துகின்றோம்

## அவுஸ்திரேலிய பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

புகலிடக் கோரிக்கையாளர்களை கடலிலேயே வைத்து திருப்பி அனுப்பி வைக்கும் நடவடிக்கையானது சட்டவிரோதமானதல்ல என அவுஸ்திரேலிய பிரதமர் டோனி அப்போட் தெரிவித்துள்ளார். சர்வதேச சட்ட விதிகளுக்கு அமைவான முறையில் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

படகு மூலம அண்மையில் அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோர முற்பட்ட இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் கடலில் வைத்தே திருப்பி அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர். இந்த விடயம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. எதிர்க்கட்சிகள், மனித உரிமை ஆர்வலர்கள் உள்ளிட்ட தரப்பினர் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை கடுமையாக விமர்சனம் செய்திருந்தனர்.

எனினும், கடலில் வைத்தே புகலிடக் கோரிக்கையாளர்களை திருப்பி அனுப்பி வைக்கும் நடவடிக்கையானது சட்ட ரீதியானது எனவும் இதில் எந்தவிதமான சட்ட மீறல்களும் கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சிகள் குறிப்பாக கிறீன் கட்சி அரசாங்கத்தின் கொள்கைகளை குழப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவுஸ்திரேலியா நோக்கி சட்ட விரோதமான முறையில் படையெடுக்கும் படகுகளை தடுப்பதே அரசாங்கத்தின் முதன்மை நோக்கமாக அமைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கடல் வழியாக புகலிடக் கோரிக்கையாளர்கள் படகு மூலம் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்க முயற்சிக்கும் வரையில் கடலில் மரணங்கள் இடம்பெறுவதனை தடுக்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

153 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்துவதனை தடுத்து நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு விதிக்கப்பட்டமை குறித்து கருத்து எதனையும் வெளியிட முடியாது என அப்போட் தெரிவித்துள்ளார். (2)

# தலாய்லாமா தவறாக வழிநடத்தப்படுகின்றார்

## தேசப்பற்றுள்ள தே.முன்னணி

திபெத்தின் ஆன்மீக தலைவர் தலாய்லாமா இலங்கை விவகாரத்தில் தவறாக் வழிநடத்தப்படுவதாக நாட்டின் தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி குற்றம்சாட்டியுள்ளது.

இலங்கையில் முஸ்லிம்கள் ஈவிரக்கமற்ற விதத்தில் நடத்தப்படுகின்றனர் என அறிக்கை விடுமாறு தலாய்லாமா தவறாக வழிநடத்தப்பட்டுள்ளார், இலங்கையின் நற்பெயரிற்கு களங்கம் விளைவிப்பதற்கு சதி முயற்சிகள் கடந்த பல தசாப்தங்களாக இடம்பெறுகின்றன, இவை தற்போது தீவிரமடைந்துள்ளன.

அவருடைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் ஆதாரமற்றவை, இலங்கை மக்கள் குறித்து நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துபவை என அவ்வமைப்பு தெரிவித்துள்ளது. (அ-2)

# இனவாத, மதவாத பொறியில் மக்கள் சிக்கிவிடக்கூடாது

## ஜே.வி.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

இனவாத மற்றும் மதவாத பொறியில் மக்கள் சிக்கிவிடக் கூடாது என ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து ஜே.வி.பி கிராமம் கிராமமாகச் சென்று தெளிவுபடுத்தல்களை மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாறான தெளிவுபடுத்தல் நிகழ்வுகளில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இனவாத, மதவாத கடும்போக்காளர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்க வேண்டிய அவசியமில்லை.

நாட்டை அழிவிலிருந்து பாதுகாக்கக் கூடிய ஒரே வழி இதுவாகும்.

அரசாங்கம் பொருளாதாரத்தை சீர்குலைப்பதில் கூடுதல் அக்கறை காட்டி வருகிறது.

காலனித்துவ நாடுகளின் ஆதிக்கத்திற்குள் நாடு சிக்கியுள்ளது. (அ-2)

# இன்று ஒரு தகவல்

## ஆகிரி ராகம்

ஒரு நாள் நாரதர் பாட்டுப் பாடிக் கொண்டே வந்தார். பொதுவாக நாரதர் மற்றவர்களை சிக்கலில் மாட்டிவிடுவது தான் வழக்கம். இந்த விடயத்தில் அவரே சிக்கலில் மாட்டிக் கொண்டார்.

நாரதர் ஆகிரி ராகத்தில் அந்தப் பாட்டைப் பாடிக் கொண்டு வந்தார். இருந்தாலும் பாட்டை சரியாகத்தான் பாடுகிறோமா? என்ற சந்தேகம் அவருக்கு!

உடனே சரஸ்வதியிடம் போய் நான் பாடும் இந்த ராகம் சரியாக இருக்கிறதா? என்று கேட்டார்.

அதற்கு சரஸ்வதி "இதை ஆஞ்சநேயரிடம் போய்க் கேட்டுத் தெரிந்து கொள்!" என்றார்.

நாரதருக்கு ஒரு மாதிரியாகி விட்டது. அவரிடம் போய்க் கேட்டுத் தெரிந்து கொள்ளும் அளவுக்கு நிலைமை ஆகிவிட்டதே என்று நினைத்தார்.

இருந்தாலும் ஆஞ்சநேயரிடம் போய்ப் பாடிக் காட்டினார்.

ஆஞ்சநேயர் நாரதரை அழைத்துக் கொண்டு போய் ஒரு மலையில் நிறுத்தினார். "இப்பொழுது பாடு... அது சரியாக இருந்தால் இந்த மலை உருக வேண்டும்" என்றார்.

நாரதர் பாடினார் மலை உருகவில்லை.

"சரி... இப்பொழுது நான் பாடுகிறேன்" என்று சொல்லி ஆஞ்சநேயர் பாடினார். மலை உருக ஆரம்பித்தது.

"நான் நின்று கொண்டிருக்கின்ற மலை உருகுதே!" என்று சத்தம் போட்டார் நாரதர்.

ஆஞ்சநேயர் பாட்டை இடையில் நிறுத்தினார். உடனே மலை உருகுவது நின்று உறைய ஆரம்பித்தது.

நாரதரின் கால் பாறையில் மாட்டிக் கொண்டது. எடுக்க முடியவில்லை. மறுபடியும் சத்தம் போட்டார். ஆஞ்சநேயர் மறுபடியும் பாடி நாரதரைக் காப்பாற்றினார்.

நாரதர் தப்பினோம் பிழைத்தோம் என்று தூரத்தில் போய் நின்றார். அவரின் கோபம் குறையவில்லை. அதனால் சாபம் கொடுத்தார்.

"இந்த ஆகிரி ராகத்தை யார் பாடினாலும் அவருக்கு சோறு கிடைக்கக் கூடாது" என்று!

அதனால் அந்த ராகத்தை இப்பொழுதும் பாடுவதற்கு பயப்படுபவர்கள் உண்டு.

ஒரு சங்கீத வித்துவான் இதை சோதித்துப் பார்க்க வேண்டும் என்று புறப்பட்டார். தயிர் சாதத்தைக் கட்டி எடுத்துக் கொண்டு ஒரு மூங்கில் காட்டுக்குப் போனார். வளைந்திருந்த ஒரு மூங்கிலில் சோற்று மூட்டையைக் கட்டினார்.

கீழே உட்கார்ந்து ஆகிரி ராகம் பாட ஆரம்பித்தார்.

பாடி முடித்ததும் கண்ணைத் திறந்து பார்த்தார். சோற்று மூட்டையைக் காணவில்லை.

சூரிய ஒளி பட்ட வளைந்திருந்த மூங்கில் நிமிர்ந்து விட்டது. கட்டுச் சோறு கைக்கெட்டாத தூரத்துக்குப் போய் விட்டது. பசி வயிற்றைக் கிள்ளியது. என்ன செய்வது என்று யோசித்தார்.

ஒரு செல்வந்தர் வீட்டுக்குப் போனார். பசிக்கிறது என்றார். உடனே இவரை உட்கார வைத்து சாப்பாடு பரிமாறினார்கள். இவருக்கு சந்தோசம்.

"ஆகிரியால் இனிமேல் எதுவும் செய்ய முடியாது! அவ்வளவுதான்!" என்று சொல்லிக் கொண்டே சோற்றைக் கையிலெடுத்தார்.

அதற்குள் இருவர் வந்து அவரை இழுத்துக் கொண்டு போய் வெளியில் தள்ளி விட்டார்கள்.

என்ன விடயம் தெரியுமா? அந்த செல்வந்தரின் மனைவியின் பெயர் ஆகிரியாம்!

ஆகிரி ராகம் பாடினால் சோறு கிடைக்காது என்பதற்கு இப்படியெல்லாம் கதைகள் உண்டு.

அது உண்மை என்ற நினைப்பில் பாடுவதற்கு பயப்படுபவர்களும் உண்டு.

ஆகிரி ராகத்தை வைகறைப் பொழுதில் வேறு ஸ்வரம் எதுவும் கலக்காமல் பாடினால் சோறு கிடைக்காது என்பது ஒரு நம்பிக்கை அவ்வளவுதான்!

இவ்வளவு இருந்தும் எனக்குத் தெரிந்த சங்கீத வித்துவான் தினமும் ஆகிரி ராகம் பாடிக் கொண்டிருப்பார்.

அவரை ஒரு நாள் பார்த்து "உங்களுக்கு ரொம்ப தைரியம் தான் சேர்!" என்றேன். அதற்கு அவர் "அப்படி இல்லை சேர்! நான் எந்த ராகம் பாடினாலும் எங்கள் வீட்டில் சோறு கிடைக்காது! அதனால்தான் தைரியமாக அந்த ராகத்தை பாடுகிறேன்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழுவைப்படகு முறையை அனுமதிக்க போவதில்லை

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கை கடற்பரப்பிற்குள் மீன்பிடிப்பதற்கான அனுமதியை பெறுவதற்கு இந்திய மத்திய அரசு எந்த அணுகு முறையை கடைப் பிடித்தாலும் இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ள Bottom Trolling என்ற இழுவைப்படகு முறையை அனுமதிக்கப் போவதில்லை என கடற்றொழில் அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ண தெரிவித்தார்.**

தமிழக மீனவர்கள் தடையின்றி இலங்கை கடற்பரப்பிற்குள் வந்து மீன்பிடித்துக் கொண்டு செல்வதற்கு வர்த்தக உரிமம் வழங்கும் படி இந்திய மத்திய அரசு இலங்கை அரசிடம் கோரிக்கை முன்வைக்கத்திட்டமிட்டுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவித்துள்ளன. இது தொடர்பாக அவர் கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கை கடற்பரப்பிற்குள் தினமும் அத்துமீறி நுழையும் தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் கைது செய்யப்படுகின்றனர்.

கச்சதீவை அண்டியுள்ள இலங்கை கடற்பரப்புக்குள்ளேயே அதிகளவு மீன்வளம், இறால் வளம் உளளன இதனால் தினமும் ஆயிரக் கணக்கானோர் வருகின்றனர்.

இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு செல்லும் இலங்கையின் வெளியுறவுச் செயலாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸிடமே இந்திய மத்திய அரசு மேற்படி கோரிக்கையை முன்வைக்கவுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திய மத்திய அரசு என்ன விதமாக கோரிக்கையை முன்வைக்கிறது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம். இலங்கை கடற்பரப்பிற்குள் தமிழக மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிப்பதை அனுமதிப்பதில்லை என்ற நிலைப்பாட்டிலிருந்து நாம் பின்வாங்கப் போவதில்லை.

எனினும். இந்திய மத்திய அரசின் கோரிக்கை இலங்கை அரசின் நிலைப்பாடு என்பன பற்றி ஆராயப்படும்.

தமிழக மீனவர்களுக்கு வர்த்தக உரிமம் வழங்குவதாக முடிபு எடுக்கப்படாலும் எக்காரணம் கொண்டும் Bottom Trolling முறையை அனுமதிப்பதில்லை என்ற நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படமாட்டாது என்று அவர் தெரிவித்தார். (அ-2)

## பாதுகாப்பு அமைப்பின் எச்சரிக்கை குறித்து ஐ.நா.அமைப்பு கவனம்

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு பாதுகாப்பு அமைச்சினால் விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கைகள் குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பு கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வரம்பு மீறிச் செயற்படக் கூடாது என பாதுகாப்பு அமைச்சு உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த எச்சரிக்கை குறித்து கவனம் செலுத்தப்படும் என ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் எச்சரிக்கை அறிக்கை குறித்து ஆராய்ந்து அதன் பின்னரே, ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைப்பாடு வெளியிடப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊடகவியலாளர்களுக்கு பயிற்சி அளித்தல், பயிற்சி பட்டறைகளை நடத்துதல், கருத்தரங்குகளை நடத்துதல், ஊடகவியலாளர் சந்திப்புக்களை நடத்துதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளில் சில தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஈடுபட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சு சுட்டிக் காட்டியிருந்தது.

சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அதிகார மீறலில் ஈடுபட்டு வருவதாகவும் அவ்வாறான நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் இந்த எச்சரிக்கைக்கு சில தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளன. (அ-2)

## ஆவணக்காப்பகத்தின் ஏழாவது கருத்துரை

(யாழ்ப்பாணம்)

சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக்காப்பகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்தொடரின் கருத்துரையில் ஏழாவது நிகழ்வாக சோனல் குல்லர் உடைய "புத்தகமாக கலை" (Art by the book) என்னும் தலைப்பில் கருத்துரை வழங்கவுள்ளார்.

குறித்த கருத்துரை தென்னாசியாவின் சமகால படைப்பாளிகளில் வேறுபட்டு இயங்கும் படைப்பாக்கதை அடிப்படையாகக்கொண்டது. சோனல் குல்லர் வோசிங்டன் பல்கலைக்கழகத்தின் தென்னாசிய கலையில் உதவிப்பேராசிரியராக பணிபுரிகிறார்.

மேற்படி நிகழ்வு எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 4 மணி தொடக்கம் 6 மணி வரை சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக்காப்பகம் 199, கோயில் வீதி, நல்லூரில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அதன் முகாமையாளர் தி.சதீஸ்குமார் கேட்டுள்ளார். (அ)

# வெள்ளைக் கொடியுடன் போராட தயாராகும் தமிழக மீனவர்கள்

(கொழும்பு)

இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்கள் மற்றும் விசைப்படகுகளை விடுவிக்கவும், கச்சதீவில் பாரம்பரிய இடத்தில் மீன்பிடி உரிமையை பெற்றுத்தர வலியுறுத்தியும் எதிர்வரும் 26 ஆம் திகதி படகுகளில் வெள்ளைக் கொடிகளை கட்டி கச்சதீவில் தஞ்சமடைவது என இராமேஸ்வரத்தில் நடைபெற்ற மீனவ சங்ககூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த ஒரு மாத காலத்தில் 150 இற்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர். 46 விசைப்படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மத்திய அரசு, கச்சதீவு அருகே மீன்பிடிக்க தமிழக மீனவர்களுக்கு அனுமதி இல்லை என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து இராமேஸ்வரம் மீன்வளத்துறை டோக்கன் வழங்கும் அலுவலகத்தில் நேற்று முன்தினம் மீனவர்கள் சங்க பிரநிதிதிகளின் அவசர ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

இதன்போது இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட தற்போது அநுராதபுரம் சிறையில் உள்ள 37 தமிழக மீனவர்களையும், இதுவரை விடுவிக்கப்படாத 46 விசைப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டும்.

பொய் வழக்கால் கடந்த இரண்டரை ஆண்டுகளாக கொழும்பு சிறையில் உள்ள 5 தங்கச்சிமடம் மீனவர்களையும் விடுதலை செய்ய வேண்டும்.

கச்சதீவுப் பகுதியில் பாரம்பரியமாக மீன்பிடிக்கும் உரிமையை மத்திய, மாநில அரசுகள் பெற்றுத் தரவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

இக் கோரிக்கையை வலியுறுத்தி எதிர்வரும் 21 ஆம் திகதி ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து தங்களது படகுகளின் ஆவணங்களை மாவட்ட ஆட்சியரிடம் ஒப்படைப்பது மற்றும் எதிர்வரும் 26 ஆம் திகதி விசைப்படகுகளில் வெள்ளைக் கொடி கட்டி அவைகளுடன் கச்சதீவு சென்று தஞ்சமடைவது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (அ-2)




## நயினை நாகபூஷணி அம்மனுக்கு இன்று குதிரை வாகனம்

### அகிலமெல்லாம் ஆளும் அகிலாண்ட நாயகி

அலைகடல் நடுவே வீற்றிருக்கும் தாயே
அலையெனவே நெளிகின்ற கருங்குழலில் பேரழகும்,
ஐந்துதலை நாகத்தில் வீற்றிருக்கும் தாயே
ஐயத்தை போக்கி அருட்கடாட்சம் தாருமம்மா

ஜெகன் கௌரி, அச்சுவேலி

### நயினை நாகபூஷணி

யாழின் நயினையிலே கோயில் கொண்டவள்
தன்னை நினைப்பவர் துயர் தீர்ப்பவள்
வன்னிமரம் கீழிருந்து ஆட்சி புரிபவள்
வானளர்ந்த இராஜகோபுரம் கொண்டவள் நாகபூஷணி

ச.ஜானுஷா, உரும்பிராய்

### வீணாகிப் போனதோ நம் நெறி

பேராசை பிடித்த நாயேன் தன்னைப்
புறந்தள்ளி விடாதே
பொன்னாசை, பெண்ணாசை, மண்ணாசையில்
இப் பூவுலகத்தை அழுந்த விடாதே தாயே!

சிவஞானராஜா, கொக்குவில்

### நல்வரம் அருள்வாயே!

நயினையில் கோயில் கொண்டவளே
நாகம் பூசித்த நாகாபரணியே!
நலம் வேண்டி எந்நாளும் நம்மக்கள் பூஜிக்க
நல்வரம் அருள்வாயே நடமாடும் நர்த்தனியே!

சுகன்யா செல்லத்துரை, ஆவரங்கால்

### அன்னையே நாகபூஷணியே

அலைகடல் நடுவே
அரவத்தில் மீதமர்ந்து
அருளாட்சி நடத்தும்
அன்னையே நாகபூஷணியே!

மதி, யாழ்ப்பாணம்

### அருள் புரிவாய் அன்னையே!

நயினையில் வீற்றிருக்கும் நாகதேவி அன்னையே
நல்லவரம் புரிந்திடுவாய் புதுமைமிகு அன்னையே
நாகத்தின் மீதிருக்கும் நாகதேவி அன்னையே
நம்பியவர்க்கு அருள்புரிவாய் அருள்மிகுந்த அன்னையே

செ.வர்மினி, மந்துவில்


### வேதனை மாறி சிரிக்க வேண்டுமம்மா

அகிலமெல்லாம் ஆண்டருளும் ஆதிபராசக்தியே நாகபூஷணி
அலைகடல் நடுவே லிங்க சமேத நாயகி ஆனவளே
நாம் படும் துயரினை எடுத்துக்கூற நாதி இல்லையம்மா
சொல்லி அழுது அருள்பெற உனையே நம்பி வந்தோம்

கி.அனோஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வில் மஹா கும்பாபிஷேகம் - 09.07.2014



## ஆசியுரை வழங்கிய ஆன்மிகத் தலைவர்கள்




ன
ர்




செஞ்சொற்செல்வர்
கலாநிதி ஆறு.திருமுருகன்




தொண்டுநாத
சுவாமிகள்



சுவாமி யாக்கிரத சைத்தன்யா




சுவாமி வித்தியாசாகர்



## சிவாச்சாரிய பெரு மக்கள்



சிவஸ்ரீ சபா. உமாபதி சர்மா



பிரம்மஸ்ரீ இ.கிருஷ்ணராம சர்மா

## அரச அதிகாரிகள்



திருமதி.ஆர்.விஜயலட்சுமி
பிரதம செயலாளர், வடக்கு மாகாண சபை



திருமதி.ச.மஞ்சுளாதேவி
பிரதேச செயலர், வேலணை



திருமதி.சாந்தி நாவுக்கரசன்
பணிப்பாளர்
இந்து கலாசார திணைக்களம்



சுந்தரம் அருமைநாயகம்
அரசாங்க அதிபர் - யாழ்ப்பாணம்



மு.இராஜகோபால்
செயலாளர், பிரதேச சபை வேலணை

## ந்த மண்டைதீவு தில்லேஸ்வரப் பெருமான்

இவை ஒரு புறம் நடந்து கொண்டிருக்க, இதற்கு முன்னதாக 2003 ஆம் ஆண்டு ஊர்காவற்றுறைப் பொலிஸார் அம்மன் சிலை ஒன்றைத் திருடிச் சென்றவர்களிடம் இருந்து மீட்டு அதனை ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஒப்படைத்தனர். இஃது AR/26/2003 என்ற இலக்கத்தின் கீழ் வழக்குப் பதிவாகியது.

இச்சம்பவம் நடந்தபோது ஊர்காவற்றுறை நீதிபதியாக பா.சுப்பிரமணியம் அவர்கள் கடமையாற்றினார். பொலிஸாரால் மீட்கப்பட்ட அம்மன் சிலை நீதிமன்றில் இருப்பது தெய்வீகத்திற்கு குந்தகம் என்று கருதிய அவர் அம்மன் சிலையை நயினாதீவு நாகபூஷணி ஆலயத்தில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க, சிலை விசேட பாதுகாப்புடன் நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தைச் சென்றடைந்தது.

**தில்லேஸ்வரனின் திருவிளையாடல்**

இறைவனின் செயல்கள் அற்புதமானவை. மண்டைதீவிலிருந்து 2005 இல் வெளிக்கிட்ட தில்லேஸ்வரப் பெருமான் ஊர்காவற்றுறை நீதிமன்றினூடாக 2007 ஆம் ஆண்டு நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்குச் சென்றபோது, என்ன நோக்கத்திற்காக தில்லைக்கூத்தன் அங்கு வந்தார் என்பதை நயினை நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர்கள் அறிந்திருக்க நியாயமில்லை.

எனினும் 2003 ஆம் ஆண்டு நயினைக்கு வந்து அங்கு தங்கியிருக்கும் அம்மன் பற்றிய ஞாபகம் ஆலய சிவாச்சாரியாருக்கு நினைவுக்குவர, அவர் அவசர அவசரமாக அம்மனைத் தூக்கிச் சென்று நடராஜர் சிலையோடு ஒப்பிட்டுக்கொள்ள, மண்டைதீவு தில்லேஸ்வரத்தில் பிரிந்த தம்பதிகளே நயினாதீவில் இணைந்தனர் என்ற உண்மையும் தன் பாகத் துணை நயினையில் தனித்திருப்பது கண்டே தில்லேஸ்வரப்பெருமான் நயினாதீவுக்குச் சென்றார் என்ற திருவிளையாடல் செயலும் தெரியவந்தது.

**ஆலயப் புனரமைப்பும் சிவன் மீள்குடியமர்வும்**

15.07.2012 ஆம் ஆண்டு தில்லேஸ்வரம் ஆலயத்தைப் புனரமைப்பதற்கான பரிபாலனசபை, பொதுக் கூட்டத்தின் ஊடாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

15.09.2013 அன்று பாலஸ்தாபனம் இடம்பெற்று ஆலயப் புனரமைப்புப் பணிகள் தொடரப்பட்டன.

இவற்றையொட்டி நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் தங்கியிருக்கும் சிவகாமவல்லி அம்பிகை சமேத தில்லேஸ்வரப் பெருமானை அவரின் சொந்த ஊரான மண்டைதீவுக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

சிரேஷ்ட சட்டத்தரணி நயினையூர் டாக்டர் தியாகர் திருநாவுக்கரசு ; ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆலய பரிபாலன சபையின் சார்பில் மனுவொன்றைத் தாக்கல் செய்தார்.

மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி எஸ்.லெனின்குமார், 2003 ஆம் ஆண்டில் ஊர்காவற்றுறை நீதிமன்றால் நயினாதீவுக்கு அனுப்பப்பட்ட பார்வதி சிலை; 2005 ஆம் ஆண்டில் இதே நீதிமன்றால் நயினாதீவுக்கு அனுப்பப்பட்ட நடராஜரின் பாகத்துணை என்பதை நிரூபிக்கும் சான்றாதாரத்தைக் கோர,

வணக்கத்திற்குரிய நயினை சிவஸ்ரீ கை.வாமதேவக் குருக்கள் அதனை உறுதிப்படுத்த, 25.06.2014 அன்று தில்லேஸ்வரப் பெருமான் தம்பதிகளை மண்டைதீவு தில்லேஸ்வரம் சிவன் ஆலய பரிபாலன சபையிடம் ஒப்படைப்பதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

நீதிமன்றத்தின் அனுமதியையடுத்து 26.06.2014 அன்று நயினா தீவு நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் ஆ.தியாகராஜா அவர்கள் தில்லேஸ்வரர் ஆலய பரிபாலன சபையிடம் நடராஜரையும் பார்வதியையும் ஒப்படைக்க; அதனை, கனடா நாட்டில் வாழும் நயினையூர் சிவநெறிச் செல்வர் ஜெகநாதன் கனகாம்பிகை தம்பதிகள் பொறுப்பேற்க, சிவகாமவல்லி அம்பிகை சமேத தில்லேஸ்வரப் பெருமான் ஊர்காவற்றுறை நீதிமன்றுக்குச் சென்று விடைபெற்று மண்டைதீவுக்கு வந்து சேர்ந்தார்.

மண்டைதீவுக்கு வந்து சேர்ந்த தில்லேஸ்வரர் 2005 இல் தான் தங்கியிருந்த திருவெண்காட்டு சித்திவிநாயகர் ஆலயத்திற்குச் சென்று அங்கு பதினொரு நாட்கள் தங்கியிருந்து தன் முதல் மைந்தன் மீது கொண்ட பாசத்தை வெளிப்படுத்தினார். 06.07.2014 ஞாயிறு அன்று மாலைப் பொழு[illegible] பெருமான் மண்டை தீவைவலம் வந்து தில்லேஸ்வரத்திற்கு மீண்டும் மாலை 7.40 மணியளவில், அந்தணர்கள் வேதபாராயணம் ஓத, அடியவர்கள் அரோ கரா என்றுரைக்க தன் இருப்பிடம் வந்து சேர்ந்தார்.

11 ஆண்டுகள் பார்வதியையும் 9 ஆண்டுகள் நடராஜரையும் பிரிந்த தில்லேஸ்வரம் இவர்களின் வருகையால் புதுப்பொலிவு பெற்றுள்ளது. சிவப்பரம்பொருளுக்கு இன்று நடக்கும் மகா கும்பாபிஷேகம் மண்டைதீவுக்கு வளம் கொழிக்க பெருந் துணைபுரியும். அதற்கு எல்லாம்வல்ல தில்லைக்கூத்தன் திருவருள்பாலிக்க வேண்டும் என்று பிரார்த்திப்போமாக.

என்.விஜயசுந்தரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனக்குடாவில் விமான படைத்தளம்; பீரிஸிடம் கேள்வியெழுப்பப்படும்

## கொழும்பு ஆங்கில ஊடகம்

இலங்கை விமானப்படைக்கான பராமரிப்புத் தளம் ஒன்றை சீனக்குடா விமானப்படை முகாமுக்குள் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகளை சீனாவிடம் இலங்கை அரசாங்கம் ஒப்படைத்தமை தொடர்பில் இந்தியா விசனம் வெளியிட்டுள்ளது.

இலங்கை விமானப்படைககான பராமரிப்புத் தளத்தை 40.3 மில்லியன் டொலர் செலவில அமைப பதற்கான கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள சீனாவின் தேசிய வான் பொறியியல் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்துக்கு இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக எதிர்வரும் 11 ஆம் திகதி புதுடில்லி செல்லும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிடம் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ், கேள்வி எழுப்பவுள்ளதாக தெரிய வந்துள்ளது என்று கொழும்பு ஆங்கில ஊடகம் தெரிவித்துள்ளது.

திருகோணமலையில் இலங்கை படைத்தரப்புக்கு பராமரிப்பு நிலையம் ஒன்றை அமைக்க சீனாவை அனுமதிப்பது 1987ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட இந்திய - இலங்கை உடன்பாட்டை மீறுகின்ற செயல் என்று இந்திய அரசாங்கம் வாதிடுவதாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த உடன்பாட்டின் ஒரு பகுதியாக அப்போதைய இலங்கையின் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கும், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையில் கடிதங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டதாகவும் இவ்வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.(அ-2)

# ஆஸியின் நடவடிக்கைகள். கண்காணிக்கப்படும்

## அகதிகளுக்கான முகவர் நிறுவனம்

அவுஸ்திரேலியாவின் நடவடிக்கைகள் குறித்து கண்காணிக்கப்படும் என ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது. அண்மையில் படகு மூலம் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்க முயன்ற 41 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை, அவுஸ்திரேலிய அரசாங்கம் இலங்கையிடம் ஒப்படைத்திருந்தது.

இந்த நடவடிக்கை குறித்து உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருவதாக முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது. எந்த அடிப்படையில் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்பட்டனர் என்பது குறித்து தமக்கு புரியவில்லை என சுட்டிக்காட்டியுள்ளது. புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்பட்ட விவகாரம் குறித்து கவனம் செலுத்தப்பட்டு அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் .

போதியளவு தகவல்கள் இல்லாத காரணத்தினால் அவுஸ்திரேலியா சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக நாடு கடத்தியதா இல்லையா என்பது பற்றி கருத்து வெளியிட முடியாது. எவ்வாறெனினும், படகு மூலம் புகலிடம் கோருவோர் தொடர்பில் அரசாங்கங்கள் நடந்து கொள்ளும் விதம் திருப்தி அளிக்கக் கூடிய வகையில் அமையவில்லை என ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் சுட்டிக் காட்டியுள்ளது. (அ-2)



திருநெல்வேலி தலங்காவில் பிள்ளையார் கோவில் கந்த புராண பூர்த்தி வைபவம் அண்மையில் நடைபெற்றது. இதன் போது உரையாசிரியர் சு.சிவராசாவிற்கு புராண கலாவித்தகர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டதை படத்தில் காணலாம்.

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 70 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 160 | 130 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 500 | 600 |
| தக்காளி | 250 | 240 | 240 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 50 | 60 |
| கோவா | 160 | 120 | 150 | 140 |
| கரட் | 200 | 160 | 160 | 200 |
| பூசணி | 60 | 50 | 60 | 60 |
| புடோல் | 60 | 60 | 60 | 80 |
| வாழைக்காய் | 60 | 50 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 - 120 | 80 | 90 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 100 | 120 |
| பாகற்காய் | 250 | 220 | 230 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 120 |
| பயற்றங்காய் | 140 | 120 | 150 | 80 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 | 120 |
| பீற்றூட் | 100 | 100 | 90 | 120 |
| கறிமிளகாய் | 400 | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 140 | 160 | 240 | 160 |
| போஞ்சி | 140 | 140 | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | 80 | 80 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 15 | 20 |
| தேசிக்காய் | 60 | 100 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 10 - 40 | 30 | 30 | 25 - 35 |
| இராசவள்ளி | 120 | 100 | 100 | 100 |

# முதல் பெண்மணி சீனா விஜயம்


நாட்டின் முதல் பெண்மணியும் ஜனாதிபதியின் பாரியாருமான சிராந்தி உத்தியோகபூர்வமாக விஜயமொன்றை சீனாவிற்கு மேற்கொண்டுள்ளார்.

அகில சீன பெண்கள் பேரவையின் அழைப்பிற்கு அமைய, சீன மகளிர் பேரவையின் மாநாடு ஒன்றில் பங்கேற்க அவர் சென்றுள்ளார்.


பெண்கள் பேரவையின் செயலாளர் ஜியாவோ யாங் மற்றும் சீனாவிற்கான இலங்கை தூதுவர் ரஞ்சித் உயன்கொட ஆகியோர் சீனா சென்றடைந்த சிராந்தியை வரவேற்றுள்ளனர். (அ-2)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 69


சச்சி சங்கீத்




சிவசிதம்பரம் மகிழ்நன் சிவநாசிம



சுபாசீதன் சத்தியமூர்த்தி




துர்ஷி துஷி துஷ்




சஞ்சீவ் றோக்




சரண் சரணியா

**படித்ததில் பிடித்தது**

ஆவி 1 : விஷம் குடிச்சு சாக போனேன்... விஷத்துல கலப்படம்... பிழைச்சுக்கிட்டேன்

ஆவி 2 : அப்புறம் எப்படி செத்த?

ஆவி 1 : காப்பாத்த மருந்து கொடுத்தாங்க... மருந்துல கலப்படம். செத்துட்டேன்.

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையான இதயம் கொண்டவர்கள் யாருடைய நம்பிக்கையையும் குலைக்க மாட்டார்கள்.

– பகவான் இராமகிருஷ்ணர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# நல்லிணக்கம் செய்ய வருகிறவர்கள் வரவேற்புகளைத் தவிர்க்க வேண்டும்

குசேலருக்கு கடுமையான வறுமை. மனைவி பிள்ளைகள் என அனைவரும் பசியால் துவள்கின்றனர்.

அந்நேரத்தில் தனது நண்பனாக இருக்கக் சுவடிய கிருஷ்ண பரமாத்மாவின் ஞாபகம் வருகிறது.

கிருஷ்ணனிடம் சென்று உதவி கேட்கலாம் என்று நினைத்த குசேலர் அவரிடம் செல்ல ஆயத்தமானார். யாரிடமாவது செல்லும் போது கையுறை கொண்டு செல்வதென்பது தவிர்க்க முடியாத பண்பாடு.

வறுமையால் வாடிய குசேலரின் மனைவி அவல் செய்து அதனைக் கிருஷ்ணனுக்குக் கொடுத்து விடுகிறார். அவலோடு குசேலர் கிருஷ்ணனிடம் செல்கிறார்.

தன் நண்பன் வருவது கண்டு ஆனந்தம் அடைந்த கிருஷ்ண பரமாத்மா குசேலர் கொண்டு வந்த அவலைக் கையில் எடுத்து வாயில் போடுகிறார்.

ஒரு முறை, இருமுறை, மூன்றுமுறை என அவலை வாயில் போடுவதை அவதானித்த கிருஷ்ணனின் துணையாள் கிருஷ்ணனின் கையைப் பிடித்து சுவாமி! போதும் என்றார்.

ஏன்? என்று வினவுகிறார் கிருஷ்ணர். மூன்று தடவைக்கு மேல் அவலை உண்பீர்களாயின் குசேலர் கிருஷ்ணனின் செல்வத்தையும், கிருஷ்ணன் குசேலரின் வறுமையையும் அடைவர் என்று துணையாள் விளக்கம் கொடுத்தார்.

இந்தப் புராணக் கதையை எவரும் சாதாரணமாக நினைத்துவிடக் கூடாது. இதற்குள் இருக்கக் கூடிய தத்துவம்; எதிலும் கவனமும் அவதானமும் இருக்கவேண்டும் என்பதாகும்.

குசேலர் கொண்டு வந்த அவல் விருப்பத்திற்குரியதாயினும் கொண்டுவந்தவரின் மனநிலை, அவரின் வறுமைநிலை, அவரின் நோக்கம் என்பன குறித்துத் தீர ஆராய்வது கட்டாயம்.

அதிலும் வந்தவரின் நோக்கம் அவதானிக்கப்பட வேண்டும். வந்தவர் தன் நோக்கத்தை நிறைவேற்றும் சிந்தனையிலேயே இருப்பார். அந்த நேரத்தில் உரியவர் சிந்தை கலங்கினால் வந்தவர் வென்றுவிடுவார் என்பதையே மேற்போந்த புராணக் கதை நமக்கு உணர்த்தி நிற்கிறது. இது ஒரு வகை.

தென்னாபிரிக்க நாட்டைச் சேர்ந்த தூதுவர் ரமபோஷ இலங்கைக்கு வந்திருந்தார். வந்தவர் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டவர். அவ்வாறு நல்லிணக்கத்தைக் கொண்ட ரமபோஷ இலங்கைக்கு வருகின்ற போது அவருக்கு விசேட வரவேற்புக்களை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படுவது வழக்கம்.

நல்லிணக்கத் தூது செய்ய வந்தவருக்கு விசேட வரவேற்பு அளிப்பதன் உள்நோக்கம் என்ன? என்பதை வந்தவர்தான் உணர வேண்டும். வரவேற்பு அதிகமாக இருந்தால் அது தொடர்பில் விழிப்பாக இருப்பதும் அவசியம்.

அதிலும் இலங்கையில் தூதுவர்களுக்கு-விசாரணை அதிகாரிகளுக்கு வழங்கப்படும் வரவேற்பு என்பது வித்தியாசமானது.

வந்தவரைப் போற்றிப் புகழ்ந்து அவரைத் தங்கள் பக்கம் இழுப்பதில் பகீரதப் பிரயத்தனங்கள் நடக்கும். அத்தகைய பிரயத்தனங்களுக்கு ஆட்பட்டவர்கள் அடிமைகளாகிப் போன வரலாறுகளே இங்கு அதிகம்.

இந்த வரலாற்று வெற்றியைத் தொடர்ந்தும் தக்க வைப்பதில் சம்பந்தப்பட்டவர்கள் கடும் ஆர்வம் காட்டுகின்றனர்.

ரமேஷ் பண்டாரி முதல் ரமபோஷ வரை இந்த புகழ் மாலையில் பொய் உரையில் வீழ்ந்தவர்கள் என்ற சோகமான வரலாறு ஏற்படாமல் இருப்பதை ரமபோஷ உறுதி செய்யவேண்டும்.

ரமேஷ் பண்டாரிக்கும் ரமபோஷவுக்கும் வித்தியாசம் அதிகம் என்பதை அவரே நிரூபிக்க வேண்டும். இதற்கான ஒரே வழி வரவேற்புக்கள், பொன்னாடை அபிஷேகங்கள், சுவர்ண புஷ்பாஞ்சலிகள் என்பவற்றை முற்றாகத் தவிர்ப்பதே ஒரே வழியாகும்.

## வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். வணிகர் கழக பணிமனையில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு நடைபெறுமென வணிகர் கழக செயலாளர் அறிவித்துள்ளார். (2)

## விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது என யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

மேலும் வளர்ப்பு நாய்களுக்கான உரிமக் கட்டணமாக 20 ரூபாவும் வரியும் அறவிடப்படும்.

இதற்கமைய இன்று புதன்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை கன்னாதிட்டி காளி கோவிலடியிலும் அதனைத் தொடர்ந்து 11.30 தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை சிவன் வடக்கு வீதியிலுள்ள பாலர் பாடசாலையிலும் நாளை வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை கீரிப் பிள்ளையார் கோவிலடியிலும் அதனைத் தொடர்ந்து 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை மாவடி வீதியிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11.00 மணிவரை பிரப்பங்குளம் வீதியிலும் அதனைத் தொடர்ந்து 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை பி.ஏ.தம்பிலேனிலும் எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை கில்னர் வீதியிலும் அதனைத் தொடர்ந்து 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை மானிப்பாய் வீதியிலுள்ள சம்திங் கூல்பாரிலும் வைத்து ஏற்றப்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

## தெய்வீக பேருரைகள்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் மகோற்சவத்தை முன்னிட்டு தினமும் இரவு 8 மணி தொடக்கம் 9 மணிவரை தெய்வீகப் பேருரைகளும் கலை நிகழ்வுகளும் நடைபெற்று வருகின்றன.

இதற்கமைய நாளை வியாழக்கிழமை சைவமணி சண்முகரெத்தினம், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆசிரியர் கு.பாலசண்முகன் எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை சைவப்புலவர் சு.சுமுகலிங்கம், எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சைவப்புலவர் கந்த சத்தியதாசனின் உரையும் இடம்பெறும். (2)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையின் பரிசளிப்புவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு அதிபர் தி.தேவதயாளன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச உறுப்பினர் சுப்பிரமணியம் மணிராசா கலந்து கொண்டு சிறப்பிப்பார்.

சிறப்பு விருந்தினர்களாக உடுவில் வைகுறோ நிறுவன இயக்குநர் ஜெயரட்ணம் ரமணதாஸ், ஞானம்ஸ் பவுண்டேசன் யாழ்.மாவட்ட இணைப்பாளர் கனகசிங்கம் சிவநீதன், துணுக்காய் பிரதேச சபை தொழில்நுட்ப அலுவலர் சபாரத்தினம் அருந்தவராசா மற்றும் கௌரவ விருந்தினரான ஓய்வுநிலை அதிபர் சி.பஞ்சாட்சரம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள். (2)

# கனகபுரத்தில் துணிகர கொள்ளை பணம், நகை என்பன அபேஸ்

(கனகபுரம்)

கனகபுரத்தில் உள்ள வீடொன்றில் இரண்டு இலட்சம் ரூபாய் பணமும் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

4 ஆம் குறுக்குத்தெரு, கனகபுரத்திலுள்ள கதிரமலைநாதன் கடம்பசீலன் என்பவரது வீட்டிலேயே மேற்படி கொள்ளை இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் திங்கள் இரவு நடைபெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இவ் விடயம் தொடர்பாக வீட்டு உரிமையாளரால் கிளிநொச்சி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து மோப்பநாய்கள் சகிதம் பொலிஸார் வீட்டை சோதனையிட்டபோது திருடர்களால் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் வாள், கத்தி என்பன வீட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

மேலும் வீட்டு உரிமையாளரால் வீட்டில் பொருத்தப்பட்ட கண்காணிப்பு கமராவினில் ஒரு நபரின் நடமாட்டம் மிக தெளிவாக பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-269)

# விசேட தேவையுடையோருக்கான இலவச கொடுப்பனவுகள்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட விசேட தேவையுடையோருக்கான இலவச கொடுப்பனவுகள் பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவசிறி அறிவித்துள்ளார்.

இக்கொடுப்பனவுகள் வீடு கட்டுவதற்கும் சுயதொழிலுக்காகவும் வழங்கப்படவுள்ளன.

இதற்கமைய அல்வாய் கிழக்கைச் சேர்ந்த உதயரத்தினம் ஐங்கரனுக்கு 75 ஆயிரம் ரூபாவும் உடுப்பிட்டியைச் சேர்ந்த எஸ்.ரதிச்சந்திராவிற்கு 25 ஆயிரம் ரூபாவும் கொடுப்பனவுகளாக வழங்கப்படவுள்ளன.

எனவே மேற்குறிப்பிட்ட இரு பயனாளிகளும் கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவுடன் தொடர்பு கொண்டு பணத்தினைப் பெற்றுக் கொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார். (2-60)

# காணி சுவீகரிப்புக்கு எதிராக போராட முன்வாருங்கள்

**கஜேந்திரன் அழைப்பு**

வடக்கில் மேற்கொள்ளப்படும் காணி சுவீகரிப்புக்கு எதிராக அனைத்து தமிழ் மக்களும் ஒன்றிணைந்து போராட முன்வர வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கீரிமலை, சேந்தான்குளம் மற்றும் திருவடிநிலை ஆகிய பகுதிகளில் 127 ஏக்கர் காணிகளைச் சுவீகரிக்கும் நோக்கில் நேற்று முன்தினம் காலை காணி அளவீடு செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மாகாண சபை, பிரதேச சபை மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் தலையீட்டினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

இதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் மேற்கொள்ளப்படும் காணி சுவீகரிப்புக்களுக்கு எதிராக தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும்.

அப்போராட்டம் மூலமே வடக்கில் மேற்கொள்ளப்படும் காணி சுவீகரிப்பை நாம் தடுத்து நிறுத்த முடியும். நாம் காணி சுவீகரிப்பை தடுத்து நிறுத்தாவிட்டால் வடக்கிலே பெருமளவான இராணுவ முகாம்களும் சிங்களக் குடியேற்றங்களும் மேற்கொள்ளப்பட்டு விடும்.

எனவே நாம் காணி சுவீகரிப்பை தடுத்து நிறுத்த அனைத்து தமிழ் மக்களும் ஒன்றிணைந்து போராட வேண்டும் என மேலும் தெரிவித்தார். (அ-6)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## தூய பக்தியால் இறைவனைக் காணலாம்



✦ உண்மை ஒன்றைச் சொல்கிறேன். கேளுங்கள். நீங்கள் உலக வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால், அதற்கிடையில் உங்கள் மனதை இறைவன்பால் திருப்ப வேண்டும். இல்லையேல் உங்கள் வாழ்வு அனர்த்தமாய் போய்விடும்.

✦ சேற்றுமீன் சேற்றில் புதையுண்டு கிடந்தாலும் அதன் மீது சேறு படிவது கிடையாது. அதே போல், மனிதன் உலகில் வாழ்ந்தாலும், அவன் உலகப் பற்றில் தோய்ந்து விடக்கூடாது.

✦ மனிதன் பந்தங்களில் சிக்கிக் கிடக்கிறான். குரு கடாட்சமின்றி இப்பந்தங்களில் இருந்து மனிதன் விடுதலை பெற முடியாது.

✦ ஈரப்பதம் கொண்டுள்ள தீக்குச்சியை எவ்வளவுதான் உரசினாலும் தீப்பற்றாது. உலர்ந்த குச்சி உரசிய அளவிலேயே பற்றிவிடும். ஒருவனுடைய உள்ளத்தில் சிறிதளவு உலக ஆசை இருக்குமானாலும், அவனுக்கு இறையருள் கிடைக்காது.

✦ பிரதிபலன் எதிர்பார்க்காத தூய்மையான அன்பினை சிலரிடத்தில் மட்டுமே காணமுடியும். பிரகலாதனிடம் அத்தகைய தூயபக்தி இருந்தது. அதனால் தான் பெருமாள் நரசிம்ம வடிவில் அவன் அழைத்தவுடனேயே தூணில் இருந்து வெளிப்பட்டார். அப்படிப்பட்டவர்கள் மிகவும் பாக்யவான்கள்.

✦ கசிந்துருகி பக்தி நாட்டம் கொள்வது விடியற்காலை நேரம் போன்றது. விடியலைத் தொடர்ந்து சூரியோதயம் உண்டாகிறது. அருள் நாட்டத்தைத் தொடர்ந்து இறைக்காட்சி உண்டாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக் கல்வியை மரங்களுக்கு கீழ் கற்கும் அவலம் இன்றும் தொடர்கிறது

## ஆனந்தன் எம்.பி.தெரிவிப்பு

(குருமன்காடு)

எமது மக்களின் சுயகௌரவ் வாழ்வுக்காக புலம்பெயர் உறவுகள் தொடர்ந்தும் உதவ வேண்டும் என சிவசக்தி ஆனந்தன் எம்.பி கோரிக்கை விடுத்துள்ளார்.

தாயகத்திலிருந்து புலம் பெயர்ந்து வாழும் உறவுகளின் நிதி பங்களிப்பில் வவுனியா மன்னகுளம் கிராமத்தில் கட்டப்பட்ட வள்ளுவர் முன்பள்ளி திறப்பு விழாவில் கலந்து கொண்டு அண்மையில் உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது,

ஆரம்ப கற்றல் தான் ஒரு மனிதனுக்கு எழுத்தறிவிககிறது. வாழ்க்கையில் சீவிப்பதற்கு மிகவும அவசியமான எழுத்தறிவையும், வாசிப்பறிவையும் போதிக்கும் முன்பளளி ஒன்று சுமார் இருபத்தைந்து வருடங்களாக இந்த கிராமத்து பிள்ளைகளுக்கு இல்லாததன் குறையை, அதன் தேவையை உணர்ந்து புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகள் வழங்கிய நிதியில் இன் று இந்த வள்ளுவர் முன்பள்ளி மிளிர்கிறது.

இந்த கிராமத்து பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பில் மிகுந்த கரிசனை கொண்டு வடமாகாண சபை உறுப்பினர் தியாகராசா பிரான்ஸ் ரி.ஆர்.ரி வானொலியிடம் விடுத்த வேண் டுகோளுக்கமைய இம்முன்பள்ளி அமைக்கப்பட்டுள்ளது.

போரால் பாதிக்கப்பட்டு நலிவுற்றுள்ள மக்களுக்கு, ஒரு வானொலி சேவையூடாக உதவ முடியும் என்பதற்கு ஒரு முன்மாதிரியாக நேயர்களது பல உதவித்திட டங்கள்மூலம் இவர்கள் நிரூபித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் இன்னும் எத்தனையோ பல தமிழ் கிராமங்கள் கல்வி, சுகாதாரம், மருத்துவம், குடிநீர், மின்சாரம், போக்குவரத்து, வாழ்விடங்கள் என்று அடிப்படை வசதிகள் இன்றி, அரசியல் பழிவாங்கல் காரணமாக அபிவிருத்திகள் இன்றி காணப்படுகின்றன. தரையிலும் மர நிழல்களுக்கு கீழேயும் அமர்ந்து மாணவர்கள் ஆரம்ப கல்வியை கற்கும் அவலம் இன்றும் தொடர்கிறது.

இந்த அவல வாழ்வை போக்க புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகள் இன்று போல் என்றும் உதவ வேண்டும்.

அங்கு நீங்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள், துன்பங்கள், துயரங்கள் பற்றி நாம் நன்கு உணர்ந்துள்ளோம். அத்தகைய இடர் நிலை சூழல்களிலும் நீங்கள் எமது மக்களின் சுயகௌரவவாழ்வுக்காக சுய பொருளாதார மேம்பாட்டுக்காக உங்களை வருத்தி தொடர்ந்தும் உதவுவதையிட்டு எமது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்ளுகின்றோம் என்றார்.

இந்த நிகழ்வில், வடமாகாண சுகாதாரத்துறை அமைச்சர் ப.சத்தியலிங்கம், மாகாணசபை உறுப்பினர் தியாகராசா, முன்பள்ளி உதவிப்பணிப்பாளர் ராஜேஸ்வரன், அபிவிருத்தி உத்தியோகத்தர் திருவரங்கன் ஆகியோரும், மாணவர்கள், ஆசிரியர்கள், கிராம அபிவிருத்தி சங்கத்தின் பிரதிநிதிகள், கிராம மக்களும் கலந்து கொண்டனர். (அ-250)

# வர்த்தகத்தை நோக்காக கொண்டு பப்பாசிக் கன்றுகள் விநியோகம்



(முல்லைத்தீவு)

ஐ.எல்.ஓ.நிறுவன உதவியுடன் பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டத்தின் ஊடாகப் பப்பாசிக் கன்றுகளை வழங்கி வர்த்தக ரீதியாக பப்பாசிச் செய்கையை ஊக்குவிக் கும் வைபவம் நேற்று முன்தினம் ஒலுமடு பொது நோக்கு மண்டபத் தில் முல்லைத்தீவு மாவட்ட , ஒலு மடு விவசாயப் போதனாசிரியர் அ.கபிலன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இலவசமாக பப்பாசிக் கன்றுகள் வழங்கப்பட்டதுடன் பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டத்தின் நோக்கம் தொடர்பிலும் தெளிவுபடுத்தப்பட்டது.

மேலும், பப்பாசியின் நடுகையும்–பராமரிப்பும், வடிகால் அமைப்பு, சேதன முறையிலான உற்பத்திகள், அறுவடை, சந்தை ப்படுத்தல் மற்றும் பப்பாசிப் பழத்தின் நுகர்ச்சி, தற்போதையபாவனையும்தேவையான அளவும் போன்றவை தொடர்பிலும் பயனாளிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் நூறு பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒருவருக்கு 170 ரெட்லேடி இன பப்பாசி கன்றுகள் வழங்கப்பட்டன.

மேலும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், சிறப்பு விருந்தினர்களாக ஒட்டு சுட்டான் பிரதேச செயலாளர் ஆர். குருபரன், ஐ.எல்.ஓ.நிறுவன உத்தியோக த்தர்கள் மற்றும் விவசாய திணை க்கள உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர், பொருளாதார அபி விருத்தி உத்தியோகத்தர் மற்றும் ஒலுமடு ,தண்டுவான் விவசாயப் போத னாசிரியர் பிரிவுகளுக்கான பயனாளிகளும்கலந்துகொண்டனர். (அ

# கரைச்சி பிரதேச செயலகத்தில் சட்ட ஆவண நடமாடும் சேவை

(கிளிநொச்சி)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சும் கிளிநொச்சி மாவட்ட செயலகமும் கரைச்சி பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் நடமாடும் சேவை எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை கரைச்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறுமென கரைச்சி பிரதேச செயலா கோ. நாகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இச் சேவையில் பிறப்பு பதிவு,காலங்கடந்த பிறப்பு பதிவு,இலங்கைக்கு வெளியில் நிகழ்ந்த பிறப்பு சான்றிதழின் பிரதி எடுத்தல் போன்றனவும் இறப்பு சான்றிதழ் தொடர்பான சேவைகளான இறப்பு பதிவு, காலங்கடந்த இறப்புபதிவு ,இலங்கைக்கு வெளியில் நிகழ் ந்ததான இறப்பு பதிவு,இறப்பு சான்றித ழின் பிரதி எடுத்தல் ஆகியனவும் இடம் பெறும்.

அத்துடன் தேசிய அடையாள அட்டை புதிதாக எடுத்தல், திருத்தம் செய்தல்,புதுப்பித்தல் ,முதியோர் அடையாள அட்டை பெற்றுக்கொள்ளல்போன்ற சேவைகளும்வழங்கப்படும்.

மேலும் தொலைந்த ஆவணங்களுக்கான பொலிஸ் அறிக்கைகள், இலவச ஆயுள்வேத சிகிச சை, இலவச சட்ட ஆலோசனைகள்,வேலை வாய்ப்பற்ற இளைஞர், யுவதிகளுக்கான தொழில் வழிகாட்டல்கள் என்பனவும் வழங்கப்படும்.

அத்துடன் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி தொடர்பான (NAITA) சேவைகள்,இலங்கை தொழில்பயிற்சி அதிகார சபையின் (VTC) சேவைகள்,தொழில் வங்கியின் ( JOB BANK) சேவைகள்விசேட தேவையுடைய நபர்க ளுக்கான தொழில் வழிகாட்டலகள், கடவுச்சீட்டு (PASSPORT) தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்பட உள் ளது. இச் சேவையில் பங்கு பெறு வோருக்கு தேவையான புகை ப்படம் எடுத்தல், தபால் செலவுகள் என்பன தேசிய மொழிகள் சமூக ஒரு மைப்பாட்டு அமைச்சினால் வழங்கப்படும்.

இந்த நடமாடும் சேவையில் தொடர்புடைய திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் பங்கு பற்ற உள்ளதால் இத்தகைய சேவைகள் தேவைப்படுவோர் தவறாது கலந்து கொண்டு பயன் பெறுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-254)

# தர்மபுரம்-கல்மடுநகர் வீதியில் மக்கள் பயணிக்க முடியாத நிலை புழுதி படிவே காரணம்

(கண்டாவளை)

தர்மபுரம்–கல்மடு பிரதான வீதியில் பயணிப்போர் மீது தினமும் கிரவல் புழுதி படிவதால் பெரும் சிரமத்துக்குள்ளாவதாக பொது மக்கள் கவலை தெரிவி த்து ள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் வீதி திருத்தப்பணிகளுக்காக கல் மடுவிலிருந்து கொண்டு செல்லப்படும் கிரவல் மண்ணானது டிப்பர் வாகனங்கள் மூலம் இவ்வீதியினூடாகவே எடுத்துச் செல்லப்படுகின்றது.

இதன்காரணமாக இவ்வீதியில் தினமும் 50 இற்கும் மேற்பட்ட டிப்பர் வாகனங்கள் போக்குவரத்தை மேற்கொண்டு வருகின்றன.

கிரவல் மண்ணை கொண்டுசெல்வதற்காக குண்டும் குழியுமாக இருந்த குறித்த வீதிக்கு கிரவல் மண்நிரவப்பட்டுள்ளது.

இதனால் பாரிய குழிகள் நிரம்பினாலும் குறித்த வீதியானது நாள் முழுவதும் புழுதி மண்டலமாகவே காட்சியளிக்கின்றது.

பேருந்து சேவையும்நடைபெறாத இவ்வீதியினூடாகவே தர்மபுரம் மத்திய கல்லூரிக்கும், தர்மபுரம் பிரதேச வைத்தியசாலைக்கும் ஏனைய இடங்களிற்கும் மக்கள் பயணம் செய்கின்றனர்.

இதனால், இவர்கள் அனைவரும் பயணிக்கும் போது கிரவல் புழுதி இவர்கள் மீது படிந்து விடுகின்றது.

இவ்வாறான நிலையில் இவ்வீதியால் பயணிப்போருக்கு இருமல், சுவாசக்கோளாறு போன்ற நோய்த்தாக்கம் ஏற்படுகின்றன.

அத்துடன்இவ்வீதியின்மிகஅருகே அமைந்துள்ள தர்மபுரம் பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் விடுதி, வெளிநோயாளர் பிரிவு என்பனவும் புழுதி படிந்தே காணப்படுகின்றது.

எனவே பெரியகுளம், தர்மபுரம் கிழக்கு, கல்மடு நகர் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்டதும்,கரைச்சி பிரதேச சபையின் கீழ் வருவதுமான இவ்வீதியை புனரமைக்குமாறு கோரப்படுவதுடன் பாடசாலை மாணவர்கள், வேலைக்குச் செல்வோர் என அதிகமானோர் பயணம் செய்யும் காலை மாலை வேளைகளில் கிரவல் ஏற்றிச் செல்லும் டிப்பர் வாகனங்கள் இவ்வீதியை பயன் படுத்தாமல் இருக்கவும் உரியவர்கள் மிகவிரைவில் நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென மேற்படி வீதியில் பயணிப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-263)




## கவிதைநூல் ஆய்வுரை

புதுக்குடியிருப்பு பிரதேச கலைக்கதம்ப விழாவானது எதிர்வரும் 14ஆம் திகதி புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்கஅதிபர் பிரதாபன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த விழாவில் கவிஞர் யோ.புரட்சி அவர்கள் எழுதி கடலில் வைத்து வெளியிட்ட எதிர் வீட்டு நாயும் என் ஏழை நாயும் கவிதை நூல் ஆய்வுரை இடம்பெறவுள்ளது

இந்த ஆய்வுரையினை இலக்கிய விமர்சகரும் கற்சிலைமடு மகாவித்தியாலய அதிபருமான சி.நாகேந்திர ராசா நிகழ்த்தவுள்ளார். (அ)



[illegible] உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வரர் சிவன்கோயில் வருடாந்த திருவிழாவின் [illegible] கிழமை நடைபெற்றபோது...... (படம்:-கிளிநொச்சி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஷியில் மெஸ்ஸி: மனைவி குத்தாட்டம்

கடந்த 1990 ஆம் ஆண்டிற்கு பிறகு அர்ஜென்டினா அரையிறுதியில் அடியெடுத்து வைப்பது மகிழ்ச்சியளிக்கிறது என்று மெஸ்ஸி கூறியுள்ளார். அர்ஜென்டினா அணி பெல்ஜியத்தை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றது. லீக் சுற்றில் ஹாட்ரிக் சாதனை படைத்த அர்ஜென்டினாவின் வெற்றி நடை, ரவுண்ட்-16, காலிறுதியிலும் தொடர்ந்தது.

இதனையடுத்து உலகக்கிண்ண வரலாற்றில், முதன்முறையாக அர்ஜென்டினா அணி தொடர்ச்சியாக 5 போட்டிகளில் வென்றது. இதனால் அர்ஜென்டினா அணியின் நட்சத்திர வீரர் லியோனல் மெஸ்ஸி, மகிழ்ச்சியாக இருக்கிறார். இது பற்றி மெஸ்ஸி கூறுகையில், 1990 ஆம் ஆண்டிற்கு பிறகு அர்ஜென்டினா அதிக பட்சமாக காலிறுதி கூட தாண்டவில்லை. ஆனால் இந்த முறை அரையிறுதியில் இருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

மேலும் இது சாதாரண காரியம் இல்லை. அதேபோல் நெதர்லாந்துக்கு எதிரான அரையிறுதி, சவால் நிறைந்ததாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை என்று கூறியுள்ளார்.

மெஸ்ஸியின் மனைவி ஆண்டரிலாவும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டார். இவர் அர்ஜென்டினா, பெல்ஜியம் அணிகள் மோதிய போட்டியை காண தனது தோழிகளுடன் வந்திருந்தார்.

மைதானத்திற்கு வெளியே வெற்றியை, அர்ஜென்டினா அணியின் "நம்பர்-10" ஜெர்சி அணிந்து கொண்டு அதை இடுப்பளவு மடக்கி கட்டிக் கொண்டு குத்தாட்டத்தில் ஈடுபட்டார் ஆண்டரிலா. (க)

# இந்தியா-இங்கிலாந்து டெஸ்ட் இன்று ஆரம்பம்



இந்தியா-இங்கிலாந்து அணிகள் இடையேயான 5 டெஸ்ட் போட்டித் தொடரில் முதல் டெஸ்ட் நாட்டிங்காமில் இன்று ஆரம்பமாகின்றது.

இந்த டெஸ்ட் தொடருக்கு முன்பு இந்திய அணி இரண்டு 3 நாள் பயிற்சி ஆட்டத்தில் விளையாடியது. இதில் டெர்பிசையர் அணிக்கு எதிராக 5 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது. இதனால் நம்பிக்கையுடன் இருக்கிறது.

இங்கிலாந்து அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்துவது சவாலானது. கடந்த முறை 4 டெஸ்டிலும் தோற்று ஒயிட் வாஷ் ஆன இந்திய அணி தற்போது வெற்றி பெற வேண்டும் என்ற ஆர்வத்துடன் உள்ளது.

இன்றைய டெஸ்ட் இலங்கை நேரப்படி பிற்பகல் 3.30 மணிக்கு தொடங்குகிறது. (க)

# அதிகாரப்...

இலங்கையில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த நியமிக்கப்பட்டுள்ள விசேட தூதுவருமான சிறில் ரமபோஷ உள்ளிட்ட அந்நாட்டு தூதுக்குழுவினர் வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் மாகாண அமைச்சர்களான ப.சத்தியலிங்கம், த.குருகுலராஜா ஆகியோரை யாழ்.ரில்ஹோ விருந்தினர் விடுதியில் நேற்றுமுற்பகல் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இந்த சந்திப்பு தொடர்பாக வடக்கு மாகாண முதலமைச்சர் ஊடகவியலாளர்களுக்கு மேலும் தெரிவிக்கையில்,

போரை ஒரு காரணமாக காட்டி அது சம்பந்தமாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதன் பின்னர் நாங்கள் இப்பொழுது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுவந்த பிற்பாடு என்ன நடக்கின்றது என்றால் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு சில அதிகாரங்களை வழங்கக்கூடாது என்ற எண்ணத்திலே சில நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

இராணுவம் இங்கு நிலை கொண்டு இருப்பதால் எங்களுடைய காணிகள் பறிபோயுள்ளன. எங்களுடைய காணியில் இராணுவம் விவசாயம் செய்கின்றது. மீன்பிடித் தொழிலிலே தெற்கிலிருந்து வருபவர்களுக்கு ஒரு சட்டம் உள்ளூர் மீனவர்களுக்கு ஒரு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கில் பெண்களுக்குப் பாதுகாப்பில்லை. பல விதங்களிலும் எங்களுடைய மக்களுக்கு படையினர் பிரச்சினையை ஏற்படுத்துகின்றார்கள்.

அதே வேளையில் வடக்கு மாகாண சபையில் இருக்கும் பிரச்சினைகளையும் எடுத்துக் கூறியிருந்தோம்.

சட்டப்படி வடக்கு மாகாணத்திற்கான பிரதம செயலாளர் முதலமைச்சரின் அனுசரணையுடன்தான் நியமிக்கப்பட வேண்டும்.

ஆனால் அவ்வாறு வடக்கு மாகாணத்தில் செய்யப்படாமல் இருக்கின்றது. வடக்கு மாகாணத்தில் தற்போது சமாந்தரமான நிர்வாகம் இரண்டு விதமாக போய்க் கொண்டு இருப்பதை எடுத்துக் கூறினோம்.

இது தொடர்பாக உனன்பாக பல கேள்விகளை எம்மிடம் கேட்டு அறிந்து கொண்டனர் தென்னாபிரிக்க தூதுக்குழுவினர்.

இதேபோன்று மற்றைய மாகாணங்களிலும் நடப்பதில்லையா? என்று கேள்வியை எழுப்பிய போது மற்றைய மாகாணங்களில் இதேபோன்று நடக்கவேண்டிய தேவையில்லை என்றும் கூறியுள்ளார்.

வெளிநாடுகளிடமிருந்து எங்களுக்கு கிடைக்கும் பணத்தில் தான் இவை செய்யப்பட்டன அத்தோடு வீதிகளை காப்பெற்றிட்டு புனரமைத்தமையினால் அவர்களுக்கு கிடைத்த நன்மை என்னவென்றால் இராணுவத்திற்கு ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு இலகுவாக (உல்லாச) செல்லக் கூடிய நிலையை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர் என்றார். (எ-6)


2 மணித்தியாலத்தில்
கணினி திருத்தம்
உங்கள் வீடுகளுக்கும் வந்து திருத்தி தருகிறோம்.
GUNAA BEST PC Computer Repair
52 Hospital Road Jaffna. 0779086737


# மேற்குலகின்...

நாட்டிலே எந்தளவுக்கு பிரச்சினைகளைத் தாங்கள் எதிர்நோக்கியிருந்தார்கள் என்றும் பல இனங்களைக் கொண்ட நாடு பல மொழிகளைக் கொண்ட நாடு பல மதங்களைக் கொண்ட ஒரு நாடு. வெள்ளையர்களும் கறுப்பர்களும் என்று பிரிவுபட்டிருந்ததொரு நிலையில் எவ்வாறு அந்த நாட்டைக் கட்டியெழுப்பி எல்லோரையும் உள்ளடக்கிய நாடாக அவர்கள் உருவாக்கினார்கள் என்பது சம்பந்தமாக எங்களுக்கு விபரித்தார்.

இப்போது இங்கு நடக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக அரசாங்கம் தங்களிடம் கோரிக்கையை விடுத்ததன் பிரகாரம் தாம் வாக்குறுதி வழங்கியதாகவும் அதனடிப்படையிலிலேயே இலங்கைக்கு வருகை தந்துள்ளதையும் கூறினார்.

ஆகவே தங்களிடமிருக்கும் அனுபவத்தை எடுத்துக் சொல்லவும் அதன் மூலம் எங்களுடைய அரசியல் வாழ்க்கையிலே மாற்றத்தை ஏற்படுத்த முடியாதென்பது சம்பந்தமாகவே அறிந்து எம்மோடு சேர்ந்து ஒத்துழைப்புதற்காகவும் வந்துள்ளதாக கூறினார். (எ-6)



பிறந்தநாள் வாழ்த்துக்கள்
உயர்திரு.அங்கஜன் இராமநாதன்
ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி
யாழ்.மாவட்ட அமைப்பாளர்

இன்று
பிறந்த நாளைக் கொண்டாடும்
திரு.அங்கஜன் இராமநாதன் ஸ்ரீ லங்கா
சுதந்திரக் கட்சி யாழ்.மாவட்ட அமைப்பாளர்
அவர்கள் இந் நாளில் சீரும் சிறப்பும் பெற்று
அரசியலில் பெருவிருட்சமாகி
எமக்கு ஒளி வீச வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர் :
கெருடாவில் வாழ். மக்கள்
(6881)



கண்ணீர்க் காணிக்கை

அமரர் கந்தசாமி சிவபாக்கியம்

பருத்தித்துறை நகர சபையின் தவிசாளர் திரு.சபா. ரவீந்திரன் அவர்களின் அன்பு மாமியார் அமரர் கந்தசாமி சிவபாக்கியம் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்
நகரசபை, பருத்தித்துறை.



பாராட்டி வாழ்த்து



மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், விசுவமடு மேற்கு, தொட்டியடி முல்லைத்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட **கனகசபை குலசிங்கம்** 01.07.2014 அன்று முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி **மாணிக்கராஜா கணேசராஜா** அவர்கள் முன்னிலையில் சமாதான நீதிபதியாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் யாழ்.மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய வித்தியாலயத்தின் பழைய மாணவரும் விசுவமடு வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க முன்னாள் உறுப்பினரும் விசுவமடு விவசாய ப.நோ.கூ. சங்க நெறியாளர் குழு முன்னாள் உறுப்பினரும், தற்போதைய புதுக்குடியிருப்பு மத்தியஸ்தர் சபை உறுப்பினரும் விசுவமடு மேற்கு ஆர்.டி.எஸ். உபதலைவரும், தொட்டியடி சித்தி விநாயகர் ஆலய உபதலைவரும், விசுவமடு கமக்காரர் அமைப்பு உறுப்பினரும் விசுவமடு மத்திய நூல் நிலைய நிர்வாக உறுப்பினருமாக கடமையாற்றுகிறார்.

அவர் மேன்மேலும் பல சிறப்புகளைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

கனகசபை குலசிங்கம்

விசுவமடு மேற்கு
தொட்டியடி மக்களும்
பொது அமைப்புக்களும்.



பிறந்த நாள் வாழ்த்து

கௌரவ அங்கஜன் இராமநாதன்



ஏட்டிலே எழுதமுடியா செயலை
எண்ணத்தில் ஆற்றவந்த
வடக்கின் வசந்தமே மாவிட்டபுரம்
தந்த சுதந்திரக் கட்சியின் சுந்தர
தமிழனே காலம் கரைப்பது உன்
இளமை நீ அதற்கு தருவது.
எதிர்காலம் எனும் சிந்தனை.
இதனால் நாளைய சமுதாயம்
காணும் செழுமை.
சங்கிலித் தொடராய் வந்த.
சமுதாயத்தில் முன்னவர்
முனைந்த கருத்தை பின்னவர்
சமுதாயத்துக்காய் மொழிந்த
இந்நாளின் பிரம்மனே வடக்கின்
விதி எழுதும் குப்தனே
ஆண்மையை ஆற்றலினால்
ஆற்றுப்படுத்த வந்த
ஆற்றுகையின் அங்கஜனே
பங்கயம் கொண்டு இந்நாள்
உன்நாளாய் எந்நாளும்
மெய்நாளாய் காண இளையவர்
சமுதாயம் இசைந்திட வந்தோம்
பிறந்தநாள் வாழ்த்து

(ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி யாழ் மாவட்ட பிரதான அமைப்பாளரும் வட மாகாண சபை உறுப்பினருமாகிய கௌரவ அங்கஜன் இராமநாதன்)

மனதார வாழ்த்துவோர்
கச்சாய் வாழ் மக்கள்
(C-7858)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தென்னாபிரிக்காவின் மத்திய...

மாக அமைந்தது. அவர்கள் தமது நாட்டுப் பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்பட்டது என்பது குறித்து விளக்கினர்.

இலங்கை இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தென்னாபிரிக்கக் குழுவினர் மத்தியஸ்தம் வழங்கினால் நாம் அவர்களுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்குவோம்.

இங்கு பல தரப்பட்ட தரப்பினர் இருக்கின்றனர் அவர்களுடனும் விரிவாகப் பேசி ஓர் இணக்கத்திற்கு வருவதே முக்கியமானது என்றார்.

இச் சந்திப்பில் தென்னாபிரிக்க குழு சார்பில் அந்நாட்டு உதவி ஜனாதிபதி சிறில் ரமபோஷ, உதவி வெளிவிவகார அமைச்சர் இப்ராகிப் இஸ்மாயில் இப்ராகிம், தற்போது ரமபோஷவின் சிரேஸ்ட ஆலோசகர் றூத மேயர், ஜவர் ஜெனின, இலங்கைக்கான தெனாபிரிக்கத் தூதுவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தென்னாபிரிக்க கறுப்பினப் பெரும்பான்மையினருக்கும்சிறுபான்மை வெள்ளையருக்குமிடையில் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முக்கிய பங்காற்றியவர்களாக ரமபோஷவும் றூத் மேயரும் விளங்குகின்றனர்.

கறுப்பினத் தலைவர் நெல்சன் மண்டேலாவின் பிரதிநிதியாக இப்போதைய உப ஜனாதிபதி சிறில ரமபோஷவும்வெள்ளையர்களின் பிரதமரான டி கிளார்க்கின் பிரதிநிதியாக றூத் மேயரும் செயற்பட்டனர்.

இவர்கள் இருவரின் மூலமே அந்த நாட்டுப் பிரச்சினை தீர்க்கப்பட்டது. இந்த நிலையில் இரண்டு தரப்பிலுமாக முக்கியத்துவம் வகித்த பிரதிநிதிகள் இலங்கை வ்விவகாரத்தைக் கையாள்வதற்கு வந்திருப்பது முக்கியமானது என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

கூட்டமைப்பு பிரதிநிதிகள் சார்பாக சம்பந்தனுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதி ராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் சந்திப்பில்கலந்து கொண்டனர். (எ-11)

## பயிற்சிப்பட்டறைகளை...

பட்ட அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு மட்டுமே அனுப்பப்பட்டுள்ளது.

படைத்துறைஅமைச்சால் விடுக்கப்பட்ட இந்தத்தடையானது பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தை மீறுகின்ற செயல் என்று அரசார்பற்ற நிறுவனங்கள் குற்றம்சாட்டியுள்ளன.

ட்ரான்ஸ்பரன்சி இன்ரநஷனல்அமைபபினால் அண்மையில் நடத்தப்பட்ட ஊடகப் பயிற்சிப் பட்டறை அரசாங்கத்தின் பின்னணியில் இருந்தவர்களால் குழப்பப்பட்டமை தெரிந்ததே.

அதேவேளை, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு இலங்கை அரசாங்கம்விடுத்துள்ள எச்சரிக்கை குறித்து ஐ.நா கவனமாக ஆராயும் என்று ஐ.நா செயலாளர் நாயகத்தின் பிரதிப்பேச்சாளர்பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார். (எ-11)

## ஐ.நா.சபை கண்ட...

விக்கப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டுள்ளது.

எனினும் நாடு கடத்தப்பட்டால் குறித்த அகதிகளின் நிலை தொடர்பில் அவதானம் தேவை என்ற அடிப்படையில் இது சர்வதேச சட்டத்தை மீறும் செயல் என்று ஐக்கிய நாடுகள் சபை கூறியுள்ளது.

சர்வதேச பாதுகாப்புடன் அகதி ஒருவர் நாடு திரும்புவதை தாம் எதிர்க்கவில்லை என்றும் ஐக்கிய நாடுகளின் அகதிகள்பேரவைதெரிவித்துள்ளது. (எ-11)

## அளுத்கம தாக்குதல்...

ளித்ததாக வடக்கு மாகாண முதலமைசசர் கூறினார்.

தென்னிலங்கையில் அளுத்கம, பேருவளை, த்ஹறாபோன்ற முஸ்லிம் பிரதேசங்களில்கடந்தமாத நடுப்பகுதியில் சிங்கள பௌத்த அமைப்பான பொதுபலசேனாவினால் நடத்தப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள தாக்குதல் சம்பவம் தொடர்பாகவே மேற்படி ஆவணம் கையளிக்கப்பட் டுள்ளது என்பது குறிப் பிடத்தக்கது. (எ-6)


### வேண்டுகோள்

முன்னாள் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் அமரர் கலாநிதி காரை.சுந்தரம்பிள்ளை எழுதி மேடையேற்றிய

'பாஞ்சாலிசபதம்'

எனும் நாட்டிய நாடகத்தின் பிரதி வைத்திருப்பவர்கள் தயவுகூர்ந்து கீழ்க் குறிப்பிடப்படும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம் (6868)

திருமதி இ.சுந்தரம்பிள்ளை
'ஆனந்தகானம்'
ஆவரங்கால், புத்தூர்.

0777 654 598,
021 320 2523

### கல்விக் கருத்தரங்கு

தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

இடம்:-K.M.I கல்வி நிலையம், ஊரெழு
காலம்:-11.07.2014 வெள்ளி
நேரம்:- பி.பகல் 3.30

(C-7863)

அனுமதிகளை K.M.I கல்வி நிலையத்தில் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

தொ.இல:-0776610744, 0770774484

### MBA

MASTER OF BUSINESS ADMINISTRATION

TRUTH 1965 ALDERSGATE

GENERAL / MARKETING / FINANCE / IT DURATION : 1 YEAR



ACCREDITED AND UGC APPROVED

ADMISSION REQUIREMENTS
- A Bachelor Degree - must be from a recognized University or College.
- An Accepted Professional Qualification
- Professional Experience - minimum of 3 years of full time Professional work experience.

(C-7859)

Week Day Batch
Mon, Wed, Fri: 6.30 - 8.30 p.m

Week End Batch
Sun: 9.00a.m - 4.00p.m

IIS CITY CAMPUS
200, Sivan Pannai Road, Jaffna.
Tel: 021 222 8060
Web: www.iis.edu.lk

FOR MORE DETAILS
021 4 900 900
077 999 2484

முதற்தடவையாக உங்கள் திசைகாட்டியின் விசா வெல்லப்படும் என்கின்ற உறுதிப்பாட்டுடன் செங்கன் விசா - 2 வருடம் - 4 வருடம்

கல்வித்தகைமை எதுவும் தேவையே இல்லை. சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, இத்தாலி உட்பட 26 நாடுகளிற்கு படிக்க உழைக்க அரியவாய்ப்பு

திட்டத்தில் இணைந்து 5 தினங்களில் தூதரகங்களில் விண்ணப்பதாரி நேரில் விண்ணப்பம் சமர்ப்பிக்கலாம்

முடிபு நாள் 11.07.2014

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090



(6873)

Home & Office Visit Computer Repairing
Luxmy
Tel : 021 320 3387
(6871)

### DIPLOMA IN MOBILE PHONE SOFTWARE

நீங்கள் பாடசாலை கல்வியை இடை நிறுத்தியவரா?
சுயதொழிலொன்றை எதிர்பார்ப்பவரா?
வேலைசெய்துகொண்டு பகுதிநேரமாக வருமானம் ஈட்ட வேண்டுமா?

புதுப்பொலிவுடன் யாழ் நகரில் உங்கள் எதிர்காலத்துக்கு நிரந்தரவருமானம்ஈட்ட ஒருவாய்ப்பு


SOFTWARE துறையில் பல வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரும் இலங்கையில் 1000கும் மேற் பட்ட மாணவர்களை உருவாக்கிய முதற்தர ஆசிரியருமான Shiyam Sir. (0777444225) பாடநெறிக்கான கட்டணத்தை முதல் மாதத்திலேயே சம்பாதிக்கமுடியும். ஆதிநவீன Mobile Phone Software முறைகள் பயிற்றுவிக்கப்படும்.

BTEC
#21, Sirampiyadi (Off Stanley Rd) Lane, Jaffna.
Tel: 0217904468

(C-7861)


## மரண அறிவித்தல்

### தம்பிராசா தவராசா (குட்டிப்பவுண்)



திருப்பூர் மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், வி.எம்.றோட், பருத்தித்துறையை வதிவிடமாகவும் கொண்ட தம்பிராசா தவராசா 04.07.2014 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா சோதிப்பிள்ளையின் அன்பு மகனும், காலம்சென்ற இராசரத்தினம் பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், வேபி காந்தராணியின் அன்புக் கணவரும், லவன், அகிலன், ரதன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தேவி, நிஷா, சோபா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தானுஜன், துவாரகா, துளசிகா, அக்ஷஜா, அனோஜன், பவித்திரன், கோபிகா, கதுஷன் ஆகியோரின் பாசமிகு பேரனாரும், முருகையா, வெள்ளிமயில், தவக்குமரன், தேன்கிளி, லோகராஜேஸ்வ்ரி (இனிதா), அலைமகள் ராஜேஸ்வரி (ஜெனதா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயக்கொடி, வெற்றிக்கொடி, இராசகொடி, சமறக்கொடி, அன்புக்கொடி, செல்வக்கொடி, செல்வராணி, தேவிகாராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (10.07.2014) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு சுப்பர்மடம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் :-
பிள்ளைகள்

வி.எம்.றோட், பருத்தித்துறை.
077 832 4943

(C-7862)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org